ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட வேண்டும், அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துத்துக் கட்ட முன்வர வேண்டும்.

- தேசியத் தலைவர் வே.பிரபாகரன்

SINDI FINANCIAL SERVICES INC.

துரித பணமாற்றுச் சேவையின் முன்னோடிகள்

★ நம்பிக்கை ★ நாணயம் ★ உத்தரவாதம்

416.288.0277

792 Kennedy Rd., Suite 204 (Eglinton & Kennedy)

வியாழன் தோறும் CANADA EELAMURASU

ஈழமுரசு

முரசு: 23 மே 06 – 12, 2021 இதழ்: 269

HOMELIFE / CHAMPIONS REALITY INC.
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED SINCE 1988

Realtors Wanted

FLEXIBLE SPLIT OR FLAT FEE

UTAYAN PONNUTHURAI
BROKER OF RECORD, Bsc (Hons)

HOMELIFE HIGHER STANDARDS

D: 416 505 2120 B: 416 281 8090

விடை தேடும் வினாக்கள்!

மூடினாலும் குற்றம் மூடாவிட்டாலும் குற்றம்

Life Insurance?
It's for those you LOVE the most!

- RESP/RRSP
- Disability
- Investments for Children

Excellent Rates!

ஆயுட்காப்புறுதி

Call: 416-704-8074

Insurance Ajay
Are you Insured?

RAMACHANDRAN LAW
Professional Corporation
Areas of Practice:
·Litigation ·Wills & Estates ·Corporate
·Family Law ·Real Estate
VITHU RAMACHANDRAN
Tel: 416 902 8225
Vithu@Ramachandran.Law
www.ramachandran.law
908 – 305 Milner Avenue, Toronto ON M1B 3V4

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd Brampton, ON L6W 3W8

கடன் தொல்லையா?
Bankruptcy மட்டுமே தீர்வு அல்ல
GET DEBT FREE WITHOUT BANKRUPTCY
For 30 years we have helped more than 55,000 people become debt free.
இக்கட்டான சூழ்நிலைகளிலும் இலகுவாக விடிவுபெற
கரன் சிவநாதன் (HARAN Sivanathan)
Tel: 416 498 4326 / 416 803 8830
msi Spergel Inc., Licensed Insolvency Trustee
505 Consumers Rd., Suite 200, Toronto On M2J 4V8
(Victoria Park / Consumers Rd.)
Email: hsivanathan@spergel.ca | www.spergel.ca
கரன் சிவநாதன், Certified Insolvency Counsellor Federally licensed

KC DENTAL
Dr. Chandra & Associates
Dr. Chandra Dr. Sharon Dr. Hajer
Visit us at KC Dental where we can provide Dental care for you and your entire family
www.kc.dental
Call us at 416-291-0710 / 416-700-0101
6065 Steeles Ave., E, Unit E4, Scarborough ON. M1X 0A8 (Spice Land Purple Building)
941, Taunton Rd East, Unit C7, Oshawa. L1H 7K5

416-904-7444
pari.sinnathamby@gmail.com
Higher Standard Agents... Higher Results!
Parithi Sinnathamby
Sales Representative
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4
Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Equity Loan $50,000
Monthly Payment $375
Approval within 24 Hrs.
உங்களின் அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும் என்னை தொடர்பு கொள்ளுங்கள்
Bronson Christian, BA (Hons)
Mortgage Agent | Lic # 11404
Cell: (647)-336-7434

OPTIMART
கண் பரிசோதனை நிபுணரினால் கண் பரிசோதிக்கப்படும்
Served by Licensed Opticians
கண் பரிசோதனை EYE EXAM
ஒரு மணிநேரத்தில் கண் வைத்தியரைச் சந்தித்து உங்கள் கண்ணாடியைப் பெற்றுக்கொள்ளலாம்
உங்கள் கண்ணின் நிறங்களை மாற்றக்கூடிய விழி வில்லைகளை நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்
30 வருடங்களுக்கு மேலாக உங்கள் சேவையில்
(416) 266 – 3389
3150 Eglington Ave.E.#6 (Eglington & Markham) Scarborough, ON. M1J 2H2
(416) 297 – 9903
3351 Markham Road (Markham & Steeles) Toronto, ON. MIX 0A6
Mon - Fri: 12pm - 6pm | Sat: 10am - 4pm | Sunday - Closed | Markhan / Eglington

LONGO LAWYERS
www.longolawyers.ca
Shenthuran Subramaniam
B.Sc.,M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647-992-2417
Phone: 416-800-4232
Fax: 416-800-6247
Toll Free: 1-844-800-4232
4950 Yonge Street, Suite 401, Toronto, ON. M2N 6K1

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்
• Visitation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation
மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை
Christeen Seevaratnam 416-258-6759
Vilosanan Sivatharman 416-993-0826
8911 Woodbine Avenue, Markham, Ontario L3R 5G1
Email: info@chapelridgefh.com
www.chapelridgefh.com

HomeLife/Future Realty Inc., Brokerage
15 years of Success
500+ Agents
Selva Vettyvel 416-568-4301
Broker of Record

416-261-1544
VettyvelLaw
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
Real Estate Law

தமிழ் பேசும் வாசகர்களை புதிய தளத்தை நோக்கி...

ஈழமுரசு

விளம்பரத் தொடர்புகளுக்கு: 647-808-7766
Email: eelamurasu@yahoo.com

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

மூன்றாவது அலையின் எழுச்சியுடன், போலி கோவிட் மருந்துகளும் அதிகரிப்பு

கோவிட் தொற்றுநோயை குணப்படுத்தும் எனக்கூறி, இணையத்தில் விளம்பரப்படுத்தப்படும் மருந்துகளை பயன்படுத்த வேண்டமென சுதேச வைத்திய அமைச்சு மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

கோவிட்டின் மூன்றாவது அலையின் பாதிப்பு அதிகரிப்பால், தொற்றுக்கான மருந்து என்ற அறிவித்தலுடன் சுதேச வைத்தியத்தில் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருட்களுடன் கூடிய மருந்துச் சீட்டுகள் கடந்த காலத்தைவிட அதிகமாகவும், வேகமானவும் பரவி வருவதை அவதானிக்க முடிந்துள்ளதாக சுதேச வைத்திய மேம்பாட்டு கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகர வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுபோன்ற வெளிநாட்டு மருந்துகளை பரிசோதிக்க வேண்டாம் என பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோயின் இரண்டாவது அலையின் போது கோவிட்டுக்கு சிகிச்சை என விளம்பரம் செய்யப்பட்ட "தம்மிக பாணி" என்ற பானத்தை உட்கொண்ட சுகாதார, ஊட்டச்சத்து மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு தொற்று ஏற்பட்டதோடு, இப்போது மேற்கத்தேய வைத்தியத்தின் பின்னர் குணமடைந்துள்ளார்.

ஆயுர்வேதம் மற்றும் சுதேச வைத்தியத்தில் ஒரு நோய்க்கான மருந்தை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் பொருட்கள் தொடர்பில் கருத்தில் கொள்வது அவசியமானது என அவரது அனுசரணையில் இயங்கும் சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மருந்துகளுக்கு ஒரு மூலிகை மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டால், தாவரத்தின் எந்த பகுதியை பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய தெளிவான அறிவு காணப்படுவது மிகவும் முக்கியம் என அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"ஒரு மருந்து தயாரிப்பில் ஒரு தாவரத்தின் பட்டை பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில் அந்த தாவரத்தின் பழத்தைப் பயன்படுத்துவது மருந்தின் சரியான பயனைப்பெற முடியாது என்பதோடு, அது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கூறுகள் சேர்வதற்கும் வழிவகுக்கும்."

ஆகவே பாரம்பரிய கை வைத்தியங்களைத் தவிர ஏனயை மருந்துகளை பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு, சுதேச வைத்திய மேம்பாட்டு கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு பொதுமக்களை மேலும் கேட்டுக்கொள்கிறது.

உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய மருந்து வகைகள் மற்றும் ஏனைய சிகிச்சை முறைகள் தொடர்பில் அமைச்சு, ஆயுர்வேத திணைக்களம், மாகாண ஆயுர்தேச திணைக்களம், மற்றும் சமுதாய சுகாதார வைத்தியர்கள் தெளிவுபடுத்துவார்கள் என இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தமது நோயெதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கிய வழிகாட்டுதல்கள் மற்றும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டுமென இராஜாங்க அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



தமிழ் பேசும் வாசகர்களை புதிய தளத்தை நோக்கி....

ஈழமுரசு

விளம்பரத் தொடர்புகளுக்கு:
Email: eelamurasu@yahoo.com

MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private 1st Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

தி.மு.க.வும் ஈழத்தமிழரும்

தமிழகத்தில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் 10 வருடங்களுக்கு பின்னர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியை பிடித்துள்ளது.இந்நிலையில் இந்த ஆட்சிமாற்றம் ஈழத்தமிழர் விவகாரங்களில் எவ்வாறான திருப்புமுனையை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் அலச ஆரம்பித்திருக்கிறார்கள்.தமிழகத்தின் மூத்த தலைவர்களான கருணாநிதி மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் மறைவுக்கு பின்னர் ஈழத்தமிழர் விவகாரம் தமிழ் நாட்டில் ஓய்ந்திருந்த நிலையில்,தி.மு.க.வின் அணுகுமுறைகள் எவ்வாறு அமையும் என்பதை கணிப்பது கடினமாக இருந்தாலும்,தி.மு.க.வின் கடந்தகால வரலாறுகள் ஈழத்தமிழருடன் பின்னிப்பிணைந்ததாகவே இருந்திருக்கிறது.

1956-ம் ஆண்டு சிதம்பரத்தில் நடந்த திராவிட முன்னேற்ற கழக பொதுக்குழுவில் அறிஞர் அண்ணாவின் ஆணையை ஏற்று, இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதற்கான தீர்மானத்தை கலைஞர் கருணாநிதி முன்மொழிந்த காலம் முதல் ஈழத்தமிழர்களுடனான உறவு ஆரம்பமாகிறது.அதன்பின்னர் 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் இருந்த குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உள்ளிட்ட 35 தமிழர்களை படுகொலை செய்த போது, சென்னையில் 7 மணி நேரத்துக்குள் 8 லட்சம் பேரை திரட்டி தி.மு.க நடத்திய பேரணி, உலக நாடுகள் அனைத்தையும் திரும்பிப் பார்க்க வைத்தது.அதனை தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு மத்திய - மாநில அரசுகள் ஈழத் தமிழர் பிரச்சினையில் கவனம் செலுத்திட வலியுறுத்தி, கலைஞர் கருணாநிதியும் பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகனும் தங்களது சட்டப் பேரவை உறுப்பினர் பொறுப்புகளை விட்டு விலகினர்.

அதேபோல்,1985 ஆம் ஆண்டு இலங்கையில் ஈழ மக்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக தமிழகத்தில் “தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) உருவாக்க வேண்டுமென்று முடிவெடுத்து, அந்த அமைப்பை உருவாக்கினார் கருணாநிதி.1987இல் சென்னையில் “ஈழத் தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு” சார்பாக பல்வேறு கட்சியினர், தமிழ்ப் புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள், மகளிர் கலந்துகொண்ட மனித சங்கிலி போராட்டத்தை தி.மு.க நடத்தியது. அதேபோல்,1991ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தி.மு.க அரசு நடந்துகொண்டது என்ற காரணம் கூறப்பட்டு,கலைஞர் தலைமையிலான தி.மு.க அரசு கலைக்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு இலங்கையில் அமைதி ஏற்படுத்தப்படுவதற்காக மோதலில் ஈடுபட்டு வரும் இரு பிரிவுகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முறையானதொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்காக பயனுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசு முன்வரவேண்டும் என தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தார்.அதேபோல்,2008 அக்டோபர் 24-ம் நாள், தலைநகர் சென்னையில் அதுவரை நடைபெறாத அளவுக்கு பிரம்மாண்டமான மனிதச் சங்கிலி ஒன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக திராவிட முன்னேற்ற கழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் பங்கேற்று நடைபெற்றது.2008 இல் தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சித் தலைவர்களையும் அழைத்து கொண்டு கலைஞர் தலைமையில் டெல்லி சென்று பிரதமரை சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து வேண்டுகோள் விடுத்ததுடன், மத்திய அமைச்சர் பிரனாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதேபோல் கலைஞர் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.2009 இல் இலங்கையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படாததைக் கண்டித்து கலைஞர் தனது உடல்நிலையைக்கூட கருத்தில் கொள்ளாமல் அண்ணா நினைவிடத்தில் உண்ணா நோன்பு மேற்கொண்டார். அதேபோல்,2011 ம் ஆண்டு கலைஞர் தலைமையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல்திட்டக் குழு கூட்டத்தில் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் வாயிலாக அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, இலங்கைப்படையினர் ஈழத் தமிழர்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலை உறுதி செய்திருக்கிறது. இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளிலும் இந்திய அரசு உடனடியாக ஈடுபட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு ஈழத்தமிழரின் போராட்டத்திலும் வலியிலும் தன்னுடைய போராட்டத்தை எந்தளவுக்கெல்லாம் வழங்கமுடியுமோ அந்தளவுக்கு போராடிய கலைஞர் கருணாநிதியின் வாரிசான முதலமைச்சராக பொறுப்பேற்கவுள்ள ஸ்டாலினிடமும் ஈழத்தமிழர்களுடனான நெருக்கம் இருக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கடந்த சில காலங்களாக ஈழத்தமிழர்களுக்கு தமிழகத்துக்குமான தொடர்பு சற்று தொய்ந்த நிலையில் காணப்படும் சூழ்நிலையில்,அந்த உறவு மீண்டும் பலப்படும் என்ற நம்பிக்கையை ஈழத்தில் இருக்கின்ற தமிழ் தலைமைகள் ஸ்டாலினுடைய வெற்றி குறித்து வெளியிட்ட கருத்துக்களும்,இலங்கை பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் போது தெரிவித்த வாழ்த்துகள் ஊடாகவும் உணரமுடிகிறது.இது வெறும் வார்த்தையோடு மாத்திரம் நின்று விடாமல் செயலிலும் நடைபெறுவதே காலத்தின் தேவை.ஏனெனில்,இன்று ஈழத்தில் நடக்கின்ற அட்டூழியங்களுக்கு அண்டை நாடான இந்தியாவில் குறிப்பாக தொப்புள் கொடி உறவு என்று கூறிக்கொண்டிருக்கும் தமிழகத்தில் இருந்த ஈழ அலை இன்று ஓய்ந்திருக்கிறது.அது மத்திய அரசாங்கத்துக்கும் சிங்கள இனவாதிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான வாய்ப்பாக அமைந்திருக்கிறது.எனவே,அந்த அலை மீண்டும் அங்கு எழுச்சி பெறவேண்டும். அதன் மூலம் மத்திய அரசாங்கத்துக்கு கொடுக்கப்படும் அழுத்தங்கள் ஈழத்தில் இடம்பெறுகின்ற அராஜகங்களை தணிப்பதற்கு உதவும்.மேலும் சீனாவுடன் இலங்கை ஒட்டி உறவாடும் ஒரு காலத்தில் இந்தியாவின் கோபத்தை, அணுகுமுறையை தமிழகத்தின் அழுத்தங்கள் மூலம் ஈழத்தமிழருக்கு சார்பானதாக மாற்றக்கூடிய ஒரு நிலைமையும் இருக்கிறது.அவ்வாறான ஒரு நிலைமையை உருவாக்குவது தமிழ் தலைவர்களின் அணுகுமுறைகளிலேயே இருக்கிறது.செய்வார்களா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

தேசியத் தலைவரின் சிந்தனையிலிருந்து

என் வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்ட கணம் என்று எந்த ஒன்றையும் குறித்துச் சொல்லமுடியாது. இலட்சிய நோக்குக் கொண்டவர்கள் என்று நான் நினைத்து நம்பிய சில நண்பர்கள் சுயநலச் சந்தர்ப்பவாதிகளாக மாறியபோது நான் மிகுந்த கவலைக்குள்ளானது உண்டு.

மாவீர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு மாவீர்களின் நினைவை ஈழமுரசில் பதிவு செய்ய எமக்கு அனுப்பி வைக்கவும்

எங்களுக்காய் தங்கள் வாழ்வை தியாகம் செய்த எம் தெய்வங்களை தினமும் நினைவு கூருவோமாக.

ஈழமுரசு
CANADA EELAMURASU

எம்முடனான தொடர்புகளுக்கு:
கண்ணன்
647-808-7766

விளம்பரத் தொடர்புகளுக்கு:
647-808-7766

Email: eelamurasu@yahoo.com

https://www.facebook.com/Eelamurasu-1400177629995000/

All the rights reserved to Eelamurasu publication. Every effort is made to pro- vide accurate information in this publication. Eelamurasu Publication is not re- sponsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

ஈழத்தமிழர்களாகிய நாம் ஆர்மேனியர்களுடன் தோழமை கொண்டு நிற்கிறோம்

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

ஆர்மேனிய இனவழிப்பை அங்கீகரித்த அதிபர் பைடன் தலைமையிலான அமெரிக்க அரசாங்கத்தினை பாராட்டுவதாக தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், ஈழத்தமிழர்களாகிய நாம் ஆர்மேனியர்களுடன் தோழமை கொண்டு நிற்கிறோம் எனத் தெரிவித்துள்ளது.

1915ம் ஆண்டு இளவேனிற்காலம் தொடங்கி 1916 இலையுதிர் காலம் வரையிலும் ஆர்மேனியர்கள் மீது படுகொலைகள், புலப்பெயர்ச்சி, பட்டினி, மோசமான நடத்துமுறை ஆகிய வழிகளில் 1.5 மில்லியன் ஆர்மேனியர்கள் மூர்க்கமான விதத்தில் நேரடியாகவே அழித்தொழிக்கப்பட்டார்கள்.

மேலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்க அரசு ஆர்மேனிய இனவழிப்பை அங்கீகரித்திருப்பது எப்போதோ நடந்திருக்க வேண்டிய ஒன்று. இந்த அங்கீகாரத்திற்கு பெரிதும் காரணம் புலம்பெயர் ஆர்மேனியர்களது அயராச் செயல்முனைப்புதான். புவிசார் அரசியல் பின்விளைவுகள் பாதகமாக இருந்த போதிலும் அதிபர் பைடன் அரசினர் தமது வெளியுறவுக் கொள்கையில், மனித உரிமைகளை மையப்படுத்தியுள்ள அறத் துணிவை நாம் பாராட்டுகிறோம்.

முதலாம் உலகப் போரில் ஆர்மேனியர்கள் ரஷ்யாவின் பக்கம் சேர்ந்து கொள்ளக் கூடும் என்று ஓட்டமன் பேரரசு கற்பித்த "நியாயம்" ஆர்மேனியரகளைத் துடைத்தொழிக்கும் குறிப்பான கொடுநோக்கைத் தணித்து விடவில்லை. ஓட்டமன் துருக்கியர் தாம் நிகழ்த்திய மனிதத் தன்மையற்ற படுகொலையை ஆர்மேனியப் பிரிவினைக் கொள்கையை எதிர்க்கத் "தேவையான நடவடிக்கை" என்று நியாயப்படுத்தியமை இனவழிப்புக் குற்றத்தின் கொடுமையையும் காட்டுவிலங்காண்டித் தனத்தையும் குறைத்து விடாது.

இனவழிப்பை அங்கீகரிப்பதன் முதன்மையான நோக்கம் தீமை செய்தவர் மீது பழி சுமத்தி விட்டுப் போவது மட்டுமே அல்ல, உலகில் எங்கும் அது நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதும்தான். அது செயல்துடிப்பான முன்னகர்வு ஆகும். இனவழிப்புக்கு இரையாகி மடிந்தோரின் உயிர்களை மறவாமலிருப்பது அச்செயல் மீண்டும் என்றேனும் நிகழ்ந்து விடாமல் தடுத்திட மீளுறுதி கொள்வதாகும் என்று அதிபர் பைடன் கூறியுள்ளார்.

"நாம் இதைச் செய்வது... எது நடந்ததோ அது மீண்டும் ஒருபோதும் நடவாதிருப்பதை உறுதி செய்வதற்காகவே. தவிர பழி சுமத்துவதற்காக அல்ல," ஓம், இனவழிப்பு ஒப்பந்தத்தின் தலைப்பே காட்டுவது போல், ஒப்பந்தம் இவ்வடிவில் வரையப்பட்டதன் நோக்கம் இனவழிப்புக் குற்றத்தைத் தண்டிப்பது மட்டுமன்று, அக்குற்றம் புரிவதைத் தடுப்பதுமாகும். இனவழிப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ள அரசுத் தரப்புகளுக்கு இனவழிப்பைத் தடுக்கும் கடமை போர்காலத்திலும், சமாதான காலத்திலு உள்ளது என்று ஒப்பந்தத்தின் முதல் உறுப்பு சொல்கிறது. போஸ்னிய இனவழிப்பு வழக்கில் பன்னாட்டு நீதிமன்றம் (IC j) இந்த சட்டக் கடப்பாட்டை உறுதிசெய்தது என அதிபர் பைடன் அறுதியிட்டுரைக்கின்றார்.

இனவழிப்பு இல்லாத உலகம் செய்ய நாம் சேர்ந்து முயற்சி செய்வோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

"தமிழ் மக்களின் நிலங்களில் சிங்கள மக்களை குடியேற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது"

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள எட்டு கிராமங்களது காணி நிர்வாகத்தை மகாவலி அதிகார சபையின் கீழ் கொண்டு செல்லும் ஜனதிபதியின் உத்தரவை இரத்துச் செய்ய வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று கருத்து வெளியிட்ட அவர், தமிழ் மக்களின் நிலங்களில் சிங்கள மக்களை குடியேற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

முப்பத்திரண்டு வருட யுத்தத்தில் பொருளாதார தடைகளை எதிர்கொண்டிருந்த தமிழ் மக்கள் அதிலிருந்து மீளமுடியாதுள்ளனர். 1984ஆம் ஆண்டு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி பிரதேச மக்கள் அங்கிருந்து இராணுவத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள் 2012ஆம் ஆண்டுவரை இடம்பெயர்ந்தவர்களாக வேறு இடங்களில் தங்கியிருந்தனர். போருக்குப் பின்னர் அங்குள்ள நிலங்களின் சட்டரீதியான தமிழ் உரிமையாளர்கள் மீளக்குடியேற முற்பட்டபோது அந்நிலங்கள் மகாவலி அபிவிருந்தி அதிகாரசபைக்குட்பட்ட பிரதேசம் என்று கூறப்பட்டது.

கொக்கிளாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் கிழக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கருநாட்டுக்கேணி, செம்மலை கிழக்கு, செம்மலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் மகாவலி அபிவிருந்தி அதிகாரசபையின் கீழ் வருவதாக 2007ஆம் ஆண்டு வர்த்தமானி அறவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. தமிழ் மக்கள் மீளக்குடியேறி நெற் செய்கை மேற்கொள்ள முற்பட்டபோது சட்டரீதியான உரித்துடைய உறுதிப்பத்திரங்களைக் கொண்ட காணிகளிலிருந்தும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இது மிகப்பெரிய பிரச்சினையை உருவாக்கியிருக்கிறது. இந்நிலையில் கடந்த 2020ஆம் ஆண்டு இறுதியில் இந்த எட்டு கிராம சேவகர் பிரிவுகளதும் காணி நிர்வாகத்தினை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்பதற்கு முயன்றது. காணிகளை நிர்வகிக்க அதிகாரத்தை தாம் பெற்றுகொள்வதாகவும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தங்களுக்கு மாற்றுமாறும் மகாவலி அபிவிருந்தி அதிகாரசபை பிரதேச செயலாளருக்கு அறிவித்தது.

இது இவ்வாறிருக்க கடந்த மாதம் ஏப்ரல் 3ஆம் திகதி வவுனியா வடக்கு நெடுங்கேணிக்கு பயணம் செய்த ஜனாதிபதி, சிங்களக் குடியேற்றம் நடந்த போகஸ்வெவ என்ற கிராமத்திற்கு சென்று அங்குள்ள சிங்கள மக்களைச் சந்தித்தார். அந்த கிராம சேவையாளர் பிரிவில் இரண்டு தமிழ்க் கிராமங்களும் ஒரு சிங்களக் கிராமமும் உள்ளன. கொக்கச்சன் குளம் என்ற தமிழ் கிராமம் பின்னர் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு போகஸ்வெவ என்று மாற்றப்பட்டது.

அந்த போகஸ்வெவ சிங்களக் கிராமத்திற்குச் சென்ற ஜனாதிபதி தமிழ் கிராமங்களிலுள்ள மக்களுக்கு தன்னைச் சந்திக்குமாறு அறிவிக்கவில்லை. தனித்து சிங்களக் கிராமத்தில் உள்ளவர்களை மட்டும் சந்தித்துள்ளார். ஜனாதிபதியே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கமால் தன்னிச்சையாக இந்த நிலங்களை பொறுப்பேற்குமாறு மகாவலி அதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளார். இது முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. இதற்கு பொறுப்பான அமைச்சர் இந்தவிடயத்தை ஜனாதிபதியிடம் கொண்டுசெல்ல வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் வாசகர்களை
புதிய தளத்தை நோக்கி...
ஈழமுரசு

விளம்பரத் தொடர்புகளுக்கு: 647-808-7766
Email: eelamurasu@yahoo.com

முடங்கியது கொடிகாமம்

யாழ்ப்பாணம், தென்மராட்சி கொடிகாமம் பிரதேசத்தில் அதிகளவு கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அங்கு இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கொடிகாமம் பொதுச் சந்தை மற்றும் கடைத்தொகுதி மூடப்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதி வெறிச்சோடிக் காணப்படுவதுடன் இராணுவத்தினர், பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொடிகாமத்தில் கொடிகாமம் வடக்கு மற்றும் கொடிகாமம் மத்தி ஆகிய பகுதிகளே நேற்றிரவு முதல் மறுஅறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் 37 பேருக்கும் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா மூவருக்கும் என வடக்கில் 43 பேருக்கு நேற்று கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அதில், யாழ். கொடிகாமம் வர்த்தகத் தொகுதியில் வர்த்தகர்கள், பணியாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 21 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மகாவலி அதிகார சபையின் நில ஆக்கிரமிப்பு நிறுத்தப்படும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபையால் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட நில சுவீகரிப்பு நிறுத்தப்படும் என்று துறைசார் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று (05) உறுதியளித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில் கடந்த மாதம் இடம்பெற்ற சந்திப்பின் அடிப்படையில் நேற்று கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பான விசேட சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே, மேற்படி விடயமும் பேசப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர்கள், செயலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு நேரில் சென்று பார்வையிட்டு கருத்தறிந்து இறுதி முடிவு எட்டப்படும் என்று தங்களால் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட நிலையில் தற்போது அந்த உத்தரவாதம் மீறப்பட்டு மகாவலி அதிகார சபை செயற்பட முனைகின்றது என தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதைச் செவிமடுத்த துறைசார் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச, குறித்த பகுதிக்கு எம்மால் நேரில் பயணித்து அது தொடர்பான இறுதி முடிவு எட்டப்படும் வரையில் மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை நிறுத்துமாறு செயலாளர் ஊடாகக் கடிதம் அனுப்பப்படும் என்று உத்தரவாதம் வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். சாவகச்சேரி இந்து கல்லூரி மாணவன் தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்து சாதனை

தற்போது வெளியாகியுள்ள கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் மாணவர் தனராஜ் சுந்தர்பவன் தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

பௌதீக விஞ்ஞானப் பிரிவில் குறித்த மாணவர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். பௌதீக விஞ்ஞான பிரிவின் புதிய பாடத்திட்டத்திற்கமைய மாணவன் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

சரசாலையை பிறப்பிடமாக கொண்ட சுந்தர்பவன் ஒலிம்பியாட் போட்டிகளிலும் சாதனை படைத்து வெளிநாட்டு புலமைப் பரிசில் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வணிகப்பிரிவில் 3ஏ சித்திகளை பெற்று மாணவி சாதனை

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி மகேந்திரம் டர்சிகா கிளிநொச்சி மாவட்டத்தில் 3ஏ பெறுபேறுகளைப்பெற்று முதல் நிலை பெற்று சாதனை படைத்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர் தரப்பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தில் வணிகப்பிரிவில் தோற்றி கிளிநொச்சி மாவட்டத்தில் 3ஏ பெறுபேறுகளைப்பெற்று முதல் நிலை பெற்றுள்ளார்.

யாழில் வணிகத்துறையில் மாவட்ட நிலையில் 2வது இடத்தினை பெற்று மாணவி சாதனை

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையில் வணிகத்துறையில் கல்வி பயின்ற மாணவி ராஜரூபன் ஜீவிதா 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட நிலையில் 2வது இடத்திற்கு தெரிவாகி பாடசாலைக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

கலைத்துறையில் மாவட்டத்தில் முதல்நிலை பெற்று சாதனை படைத்த மாணவி பரமசிவம் சுபிலக்ஷி

வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி கலைப்பிரிவில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி பரமசிவம் சுபிலக்ஷி 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தையும், தேசிய ரீதியில் 351வது இடத்தையும் பிடித்து வவுனியா மண்ணுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

யாழ். இந்துவில் 21 பேருக்கு 3 ஏ சித்தி

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் 21 பேர் 3 ஏ பெறுபேறு பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் தமிழ்மொழி மூலம் கணிதப் பிரிவில் தோற்றிய 12 பேரும், விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய 4 பேரும், உயிரியல் தொழிநுட்பப் பிரிவில் தோற்றிய ஒருவரும், மேலும் ஆங்கில மொழி மூலம் தோற்றியவர்களில் கணிதப் பிரிவில் 4 பேருமாக 21 பேர் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்து உயிரியல் பிரிவில் சாதனை படைத்த மாணவி

கிளிநொச்சி, பரந்தன் பகுதியைச் சேர்ந்த மகேஸ்வரன் கயலினி என்ற கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி இரண்டு ஏ, பி பெறுபேறுகளை பெற்று உயிரியல் தொழிநுட்ப பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதல் நிலையை பெற்றுள்ளார். குறித்த மாணவி பரீட்சை எழுதிவிட்டு தனது குடும்பத்தின் பொருளாதார சுமையை குறைக்க கிளிநொச்சி, அறிவியல் நகரில் இயங்கி வருகின்ற ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியுள்ளார்.

LIVE LIFE FULLY COVERED

RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca

- Life Insurance Products
- Disability Insurance
- Travel Insurance
- Mortgage Insurance
- RESP Education Saving Plan
- Critical Illness Insurance
- Dental & Drug Insurance
- Non-Medical Insurance
- RRSP's Investments
- Final Expense Products

Mega Financial Group
Office: 416-293-5559 | Fax: 416-293-9409 | www.megafinancial.ca
PH 28-4168 Finch Ave. E, Scarborough, ON. M1S 5H6

இலங்கை செய்திகள்

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய சர்வசே சமுகத்துடன் பொன்சேகா இரகசிய ஒப்பந்தம்

கடந்த 2010 நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் சரத்பொன்சேகா தமிழ்ப் பிரதேசங்களை வெற்றிகொண்டதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட சர்வதேச சமூகத்திற்கும், அவருக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தமே காரணமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (05) முற்பகலில் உரையாற்றியபோது அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு பேசிய அவர், யாழ். மிருசுவில் படுகொலை வழக்கில் விடுலையாக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவின் விடுதலையை எதிர்க்கின்ற பொன்சேகா, ஏன் 12,500 முன்னாள் போராளிகள் விடுவிக்கப்படுகையில் எதிர்ப்பு வெளியிடவில்லை எனக் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை அமைச்சர் வீரசேகரவுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதாக சபையில் குறிப்பிட்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இராணுவ சீருடை போர்வையில் படுகொலை செய்திருந்தால் நிச்சயம் சரத் வீரசேகர, வசந்த கரன்னாகொட அல்லது சுனில் ரத்நாயக்க மாத்திரமல்ல, குற்றம் செய்த எவர் வேண்டுமானாலும் தூக்குத் தண்டனையே வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இலங்கை வர தடை

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்தியாவில் இருந்து வரும் எந்தவொரு நபருக்கும் இலங்கைக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொவிட் பரவலை கட்டுப் படுத்தும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தகுந்த நேரத்தில் பாடம் புகட்டுவோம்

அரசாங்கத்துக்கு முருந்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை

இலங்கையில் ஆட்சிமாற்றம் மற்றும் ஆட்சியாளர்களை மாற்றுகின்ற நடவடிக்கை தகுந்த நேரத்தில் மேற்கொள்ளப்படும் என கோட்டாபய - மஹிந்த தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தை அமைக்க பெரிதும் பாடுபட்ட முன்னணி பௌத்த தேரரான முருந்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரித்துள்ளார்.

கொழும்பு - நாரஹேன்பிட்டி அபயராமய விகாரையில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட முருந்தெட்டுவே ஆனந்த தேரர்,தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிகவும் பலவீனத்துடன் காணப்படுவதாக கவலை வெளியிட்டார்.

1960ஆம் ஆண்டிலிருந்து இருந்து வந்த சுகாதார அமைச்சுக்களில் தற்போது உள்ள நிர்வாகத்தைப் போன்ற பலவீனமான நிர்வாகம் இதுவரை இருக்கவில்லை. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமே இன்று சுகாதார அமைச்சையும் அரசாங்கத்தையும் ஆட்சிசெய்கின்றது. அதனாலேயே இன்று நாட்டிலும் கொரோனா தொற்று உக்கிரமடைந்திருக்கின்றது.

எங்களது கேள்விகளுக்கும் ஆலோசனைகளுக்கும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி செவிமடுப்பதில்லை.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் கைகளில் வாள் இருந்தாலும் அது தற்போது துரும்புப்பிடித்திருக்கின்றது. அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சரின் பலவீன நிலைமையை நாங்கள் மிகவும் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

கொரோனா தொற்று கட்டுப்படுத்தும்வரை நாங்கள் பொறுமையுடன் இருக்கின்றோம். ஒருதலைப்பட்ச தீர்மானங்களை அமைச்சரும் சுகாதார அமைச்சும் தொடர்ந்தும் எடுத்துவந்தால் நாடளாவிய ரீதியிலான போராட்டங்களையும் நடத்த நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அரசாங்கத்தை கவிழ்த்தல் மற்றும் புதிய அரசாங்கத்தை நியமித்தல் என்கின்ற பொறுப்புக்கள் மக்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்த செயற்பாடுக்ள தகுந்த நேரத்தில் இடம்பெறும் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலினை நடத்தாதிருக்க அரசாங்கம் தீர்மானம்

மாகாண சபைத் தேர்தலினை விரைவில் நடத்தாதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற ஆளும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொரோனா தொற்று பரவி வரும் தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சிறந்த விடயமல்லவென இதன் போது ஆளுந்தரப்பின் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிமலராஜன் கொலை வழக்கு:

சந்தேக நபர்கள் 6 பேரையும் விடுவித்தது நீதிமன்றம்

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கின் சந்தேக நபர்கள் 6 பேருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது என சட்ட மா அதிபர் திணைக்களம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு பரிந்துரைத்துள்ளது.

அதனால் 6 சந்தேக நபர்களையும் விடுவிக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு, ஒக்ரோபர் 19ஆம் திகதி இரவு 10.00 மணியளவில் யாழ்ப்பாண நகரின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக இருந்த கச்சேரியடிப் பகுதியில் உள்ள அவரது வீட்டுக்குள் நுழைந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுப்படுகொலை செய்தனர். அவர் எழுதிக்கொண்டிருந்த கட்டுரையின் மீது சரிந்து விழுந்து உயிரிழந்தார்.

அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட பின்னர், அவரது வீட்டுக்குள் கைக்குண்டை வீசி விட்டுச் சென்றதில், நிமலராஜனின் தந்தை, தாய், மருமகன் உள்ளிட்டோர் படுகாயமடைந்தனர்.

நிமலராஜன் கொலை தொடர்பாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பி 423.̓.2000 என்ற வழக்கு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பில் போடப்பட்டது.

பின்னர் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக கடந்த பல ஆண்டுகளாக வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தது.

இந்நிலையில் நிமலராஜன் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 6 பேருக்கும் எதிரான குற்றவியல் நடவடிக்கையை தொடர்ந்து முன்னேடுக்க முடியாது என பரிந்துரை வழங்கியுள்ளார்.

அத்துடன், வழக்கின் சந்தேக நபர்களை விடுவித்து 14 நாட்களுக்குள் அறிக்கையிடுமாறும் பொலிஸ் திணைக்களத்தின்

சட்டப் பிரிவு பணிப்பாளருக்கு சட்ட மா அதிபர் பணித்துள்ளார்.

கனடாவிற்கான உயர்ஸ்தானிகர் பதவியை நிராகரித்த சட்ட மா அதிபர்

கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பினை சட்ட மா அதிபர் தப்புலா லிவேரா நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் இந்த பதவிக்காக லிவேராவின் பெயர் முன்மொழியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், தாம் அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் உள்நாட்டில் மக்களுக்கு சேவையாற்ற விரும்புவதாகவும் லிவேரா தெரிவித்துள்ளார்.

சட்ட மா அதிபர் லிவேராவின் பதவிக் காலம் இந்த மாத இறுதியில் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி இவ்வாறான ஓர் பதவியை வழங்கியமைக்காக நன்றி பாராட்டுவதாகவும், எனினும் தாம் இலங்கையிலேயே இருந்து கொண்டு நாட்டு மக்களுக்கு சேவையாற்ற விரும்புவதாகவும் லிவேரா கூறியதாக சட்டத்தரணி ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

யாழில் முககவசம் அணியாதோரை அள்ளிச்சென்ற பொலிஸார்

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் முககவசம் அணியாதோர், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோர் பொலிஸ ாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (05) மாலை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் யாழ். நகர பகுதியில் இடம்பெற்ற விஷேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது,

யாழ். நகர்ப்பகுதியில் முககவசம் அணியாதோர் மற்றும் சுகாதார நடைமுறையினை பின்பற்றாதோர் 30 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

கொவிட் நிலைமைகளை கையாள அவசியமான சட்டங்களை நிறைவேற்றுங்கள்

எம்.எ.சுமந்திரன் தெரிவிப்பு

நாட்டின் சுகாதார நெருக்கடிகளை கையாளக்கூடிய சட்டங்கள் இல்லை, நடைமுறையில் உள்ள நூறு, நூற்றைம்பது ஆண்டுகள் பழமையான சட்டத்தினால் தற்போதைய அவசரகான சுகாதார நிலைமைகளை கையாள முடியாது. எனவே கொரோனா நிலைமைகளை கையாளக்கூடிய புதிய சட்டங்களை உடனடியாக கொண்டுவந்து நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கொவிட்-19 சவால்களுக்கு மத்தியில் நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமைகள் குறித்த புதன்கிழமை இடம்பெற்ற இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

வேறு நாடுகளில் அவசரகால நோய் எதிர்ப்பு சட்டங்கள் உள்ளன. இந்தியா,சிங்கபூர், இத்தாலி, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் அவசரமாக இந்த சட்டங்களை கொண்டுவந்து கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். ஆனால் எமது நாட்டில் அவ்வாறான நிலையொன்று இல்லை. பொறுப்புள்ள அரசாங்கம் என்றால் இது குறித்த சட்டங்களை கொண்டுவர வேண்டும் எனவும் கூறினார்.

இப்போதும் நூறு,150 ஆண்டுகள் பழமையான சட்டங்களே நடைமுறையில் உள்ளதாக சுட்டிக்காட்டிய அவர்,. இந்த சட்டத்தினால் தற்போதைய நிலைமைகளை கையாள முடியாது. புதிய சட்டங்களை கொண்டுவருவதாக நீதி அமைச்சர் கூறினார். ஆனால் இன்னமும் சட்டம் கொண்டுவரப்படவில்லை. ஆனால் துறைமுக நகர சட்டத்தை அவசர அவசரமாக கொண்டுவந்து நிறைவேற்றிக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றனர். இதிலிருந்து வெளிப்படுவது என்னவென்றால் மக்களின் தேவைகள் குறித்து அரசாங்கத்திற்கு எந்த அக்கறையும் இல்லை என்பதேயாகும் என்றார்.

சுகாதார கட்டுப்பாட்டு சட்டமொன்றை உருவாக்க வேண்டுமென நான் தனிநபர் பிரேரணை ஒன்றினை முன்வைத்தேன். ஆனால் அது குறித்து கவனமும் செலுத்தப்படவில்லை. சுகாதார அமைச்சருக்கு எனது யோசனைகளை கொண்டு சேர்த்துள்ளமை நல்ல விடயமே ஆனால் சட்டத்தை கொண்டுவருவதில் அரசாங்கம் பலவீனப்பட்டுள்ளது. மக்களின் பயணங்களை கட்டுப்படுத்த, தனிமைப்படுத்த சட்டங்கள் இல்லை. பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தில் இவற்றை கையாள முடியாது. மக்களின் பயணங்களை கட்டுப்படுத்த நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் மூலமாக மட்டுமே நிறுத்த முடியும் எனவும் கூறினார்.

"கல்முனை வடக்கு உப பிரதேச விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்களின் எதிரிகளாக செயற்படுகின்றது"

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோடு இணைந்து கொண்டு கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தலாம் என தமிழ் தேசியக்கூட்டமைப்பு நினைத்தால் அது பகல் கனவு. இந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்களின் எதிரிகளாகவும் விரோதிகளாகவுமே செயற்படுகின்றனர் என இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

கொவிட்-19 சவால்களுக்கு மத்தியில் நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமைகள் குறித்த புதன்கிழமை இடம்பெற்ற இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினர் தந்திரமாகவும் இராஜதந்திரமாகவும் காய்களை நகர்த்துபவர்கள். அவர்கள் களமுனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுர்த்த உதவுவார்கள் என தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் பகல் கனவு காணக்கூடாது. அவர்கள் உங்களுடன் சுமுகமான உறவை,விட்டுக்கொடுக்கும் உறவை கொண்டிருப்பார்களேயானால் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்த தமது இணக்கத்தை வெளிப்படுத்திக்காட்டட்டும் பார்க்கலாம் என சவால் விடுக்கின்றேன்.

கிழக்கில் நாம் முஸ்லிம் மக்களுக்கு பல விட்டுக்கொடுப்புக்களை செய்துள்ளோம். அக்கரைப்பற்று பிரதேச சபை ஒரே நாளில் மாநகர சபையானது. மட்டக்களப்பில் நிலைத்தொடர்பற்ற முஸ்லிம் கல்வி வலயம் உருவானது. அம்பாறைக்கு தனி ஆர்.டி.எஸ். அலுவலகம் உருவானது. இப்படி எத்தனையோ விடயங்களை நாம் விட்டுக்கொடுத்து வந்தோம். ஆனால் கல்முனை வடக்கு உப பிரதேச செயலக விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லி ம் காங்கிரஸ னர் கல்முனை தமிழ் மக்களின் ஒட்டுமொத்த எதிரியாகவும் விரோதியாகவுமே செயற்படுகின்றனர். அதிலும் ஹரிஷ் எம்.பி. அப்பட்டமாக தமிழர் விரோதியாக செயற்படுகின்றார்.

சாணக்கியன் எம்.பி இங்கு என்னைப்பற்றி சில விடயங்கள் கூறினார். அவர் பாராளுமன்றத்துக்கு புதியவர். அவர் 4 ஆர்ப்பாட்டங்கள் செய்திருந்தால் நான் 40 ஆர்ப்பாட்டங்கள் செய்தவன். அவர் போகப்போக புரிந்து கொள்வார். இங்கு முஜிபுர் ரஹ்மான் எம்.பி.யும் உள்ளார்.இந்த விடயத்தில் முஸ்லிம் எம்.பி.க்கள் தடையாக இருக்கக்கூடாது என அவரும் எடுத்துக்கூற வேண்டும் என்றார். இதன்போது எழுந்த முஜிபுர் ரஹ்மான் ,முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.க்கள் எல்லாம் உங்கள் அரசோடுதான் இருக்கின்றனர்.

அவர்களுடன் நீங்க பேச முடியும்தானே எனக்கேட்டார். இதனையடுத்து எழுந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் , இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் முயற்சியை பாராட்டுகின்றேன். அவர் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தொடர்பில் இன்னும் முனைப்பாக செயற்பட வேண்டும் என கோருகின்றேன்.அதற்கு எமது ஆதரவை வழங்குவோம் என்றார்.அப்போது மீண்டும் எழுந்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன். செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.க்கு நன்னாரி. அவர் போன்று முஜிபுர் ரஹ்மான் எம்.பி.யும் இவ்விடயத்தில் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றார்.

கல்முனை விவகாரம்: முடிவுக்கு வருகின்றது சமலுடன் தமிழ் எம்.பிக்கள் நடத்திய சந்திப்பில் இணக்கம்

கல்முனை பிரதேச செயலகத்துக் கணக்காளரை நியமிக்கவும் எல்லைகளை உறுதிப்படுத்தவும் அமைச்சர் சமல் ராஜபக்சவுடன் தமிழ்த் தேசியக் கட்சிகள் நடத்திய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாணாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில் கடந்த மாதம் நடைபெற்ற சந்திப்பின் அடிப்படையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விவகாரம் தடர்பில் இணக்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்திப்பில் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு அமைச்சால் நியமிக்கப்பட்ட கணக்காளர் கடமையைப் பொறுப்பேற்காதமையால் உடனடியாகப் புதிய கணக்காளர் நியமிக்கப்படுவார் . அதேநேரம் தனிப் பிரதேச சபை விடயத்தில் சில இடங்களில் எல்லைகள் தொடர்பான முரண்பாடு காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே, இதனை முதலில் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இதனைத் தீர்ப்பதற்காக எல்லை வரையறையை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் கையளித்து அதன் பிரதியை அமைச்சர் சமல் ராஜபக்சவிடம் கையளிக்க வேண்டும் எனவும், அதன் அடிப்படையில் விரைந்து தீர்வு எட்டப்படும் எனவும் இணக்கம் காணப்பட்டது.

அமைச்சருடனான இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

To Manage your Investment Properties
WATSON PROPERTY MANAGEMENT LTD
Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
Our Services Include :
• Advertising property
• Showing to tenants
• Finding right tenant
• Negotiate leases
• Inspection before & after renting
• Collecting rent
• Arranging handymen for maintenance & repairs
• Evicting bad tenants
• Year-end accounting
• Renewal of lease
• Market value update
30 YEARS Experience
HOMELIFE HIGHER STANDARDS
Karu Kandiah FRI, CRES, SRES.
Broker- HomeLife Galaxy Real Estate Ltd
Director - Watson Property Management
Direct: 416-616-7278
Email: karu.realtor@gmail.com
To Buy, Sell & Invest in Real Estate
HomeLife Galaxy Real Estate Ltd. Brokerage.
Tel 416-284-5555 Fax 416-284-5727
80 Corporate Dr. # 210, Scarborough ON M1H 3G5

யுத்த பிரதேசங்களிலிருந்து 27,568 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றல்

முல்லைத்தீவு அம்பகாமம் தச்சடம்பன் மற்றும் கிளிநொச்சி முகமாலை ஆனையிறவு ஆகிய பிரதேசங்களில் இதுவரை பதினாறு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்றுநான்கு சதுரமீற்றர் பரப்பளவில் (1,636,204) இருந்து இருபத்தேழாயிரத்து ஐனூற்றுபத்தெட்டு (27,568) அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடடக அறிக்கையில் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021 ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் பதினாறு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்றுநான்கு சதுரமீற்றர் பரப்பளவில் (1,636,204sqm) இருந்து இருபத்தேழாயிரத்து ஐனூற்றுபத்தெட்டு (27,568) அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய இணையப் பாதுகாப்பு சுட்டியில் உலகளாவிய ரீதியில் இலங்கை 69ஆவது இடத்தில்

தேசிய இணையப் பாதுகாப்பு சுட்டியில் உலகளாவிய 160 நாடுகளில் இலங்கை 69ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கணணி அவசர சேவைப்பிரிவு இதனை அறிவித்துள்ளது.

இணையக்குற்றங்களை தடுத்தல் மற்றும் இணையக்குற்றங்களை முகாமைப்படுத்தல் என்ற அடிப்படையில் இந்த தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது.

2020ஆம் ஆண்டில் இந்த தரப்பட்டியலில் இலங்கை 98ஆவது இடத்தில் இருந்தது.

எனினும் 2021இல் முன்னேற்றம் அடைந்து 69 இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை உலகளாவிய இணையப் பாதுகாப்பு சுட்டியில் இலங்கை 83ஆவது இடத்தை பெற்றுள்ளது.

தகவல் தொழிநுட்ப அபிவிருத்தியில் 63ஆவது இடத்தை பெற்றுள்ளது.

இந்த சுட்டியின் படி அமெரிக்கா 16ஆவது இடத்திலும், பிரித்தானியா 18ஆவது இடத்திலும் கனடா 27ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

APPARTMENT ROOM FOR RENT

KENNEDY & EGLINTON

2 அறைகள் கொண்ட தொடர்மாடிக் கட்டடத்தில் (APT) ஒரு அறை வாடகைக்கு உண்டு.

NO SMOKE, ALCOHOL, PETS

1 PERSON $900 / 2 PEOPLE $600

AVAILABLE IMMEDIATELY

A1 CANADA

RENTAL SERVICES

CALL: MR.RATHA FRANCIS

TEL: 416-752-4444

CELL: 416-857-5252

நவா திருமண சேவை

எனது திருமண சேவையில் பல தெரிவுகளுடன் மணமகன், மணமகளின் ஜாதகங்கள் உள்ளன. அத்துடன் மணமக்களின் ஜாதகங்கள் பொருத்தம் பார்த்து கொடுக்கப்படும்.

நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளவும்

நவா: 437-236-4468 / 416-519-9520

JATHU RENOVATION

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

Free Estimate

உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

RASAN

Cell: (647) 532-4162 | Office: (647) 821-0356

Email: rassan311@gmail.com| Web: www.jathurenovation.com

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

RS JEWEL WORKSHOP

RS தங்கப்பட்டறை

MANUFACTURES OF CUSTOM JEWELLERY

- விருப்ப வடிவமைப்பு
- எல்லா வகையான நகை திருத்தமும் சுத்தப்படுத்தலும்
- லேசர் ஒட்டுவேலை
- பழைய நகைகளை உருக்கி புதிய நகைகளாக செய்து தரப்படும்
- காது குத்தல், பொன் உருக்கி அதே தங்கத்தில் தாலிக்கொடி உரிய முறையில் செய்துதரப்படும்

S.MOORTHY - 416.822.7171

Majestic City 2900 Markham Rd, Scarborough # A16

தமிழ் பேசும் வாசகர்களை புதிய தளத்தை நோக்கி...

விளம்பரத் தொடர்புகளுக்கு: 647-808-7766

Email: eelamurasu@yahoo.com

ஈழமுரசு

முகுந்தமுரளி

விடை தேடும் வினாக்கள்!

கொவிட் 19 சர்வதேச பரவல் காலத்தில் சர்வதேச வங்கி நிதியத்திலேயே சரிவு ஏற்பட்டுள்ளது. அதேகாலத்தில் இலங்கை பொருளாதாரமும் கடுமையான வெளித்துறை சிக்கல்களுள் சிக்குண்டுள்ளது. பெருந்தொற்றினால் நிலைமை மோசமடைய, பெரும்பாலும் சுற்றுலா வருவாயின் கணிசமான இழப்புக்கு வழிவகுத்தது. இதனால் ஒருபுறம் பெரிய வெளிநாட்டு நாணய வருவாயாக உள்ள துறை முடக்கமாக, மறுபுறம் இலங்கை தனது வெளிநாட்டு கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தவிக்கிறது.

இத்தொற்றுக் காலத்திலும் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களுக்கெதிரான நடவடிக்கைகள், அரசியல் பழிவாங்கல்கள், உட்கட்சி மோதல்கள் போன்ற சூழ்நிலைகள் பெரிய சிக்கல்களை உருவாக்கி நிற்கின்றன. இலங்கை தனது பிரச்சினைகளை ஓர் உள்நாட்டு அரசியல் பிரச்சனையாக மட்டுமே தீர்க்க முடியாது. அதேவேளை இலங்கை பொருளாதார நெருக்டிகளுக்குத் தீர்வுகாண சீனா, இந்தியா, அமெரிக்கா அல்லது சர்வதேச நாணய நிதியம் அல்லது உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புகளின் ஆதரவு தேவைப்படுகிறது.

இதுவரை, இலங்கை தனது வெளித்துறை பாதிப்புகளை சமாளிக்க சீனாவையே அதிகமாக நம்பியுள்ளது, ஏககாலத்தில் இந்தியாவுடனான பொருளாதார உறவுகள் தேக்க நிலையில் உள்ளன. அதே நேரத்தில், இந்தியாவை எரிச்சலடையச் செய்ய இலங்கை முயற்சிக்கிறது. இத்தகைய பின்னணியில், சீனா, இந்தியா மற்றும் உள்நாட்டு தேசியவாதிகள் இடையே சமநிலையை ஏற்படுத்த இலங்கை இப்போது கடுமையாக போராடி வருகிறது, அதே நேரத்தில் நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து சாத்தியமானவரை காப்பாற்றவும் முயற்சிக்கிறது. இது ஒரு இலகுவான விடயமல்ல.

இந்து சமுத்திரத்தின் முத்திற்கும் வளர்ந்து வரும் உலக சக்திகளுக்கும் இடையிலான வலுப்படுத்தும் உறவு பெரும்பாலும் பொருளாதார ரீதியானது. ஆயினுங்கூட, இலங்கையின் நெருங்கிய அண்டை நாடான இந்தியாவும் அமெரிக்காவும் சீன-இலங்கை உறவில் முன்னேற்றங்களை விடாமுயற்சியுடன் கண்காணித்து வருகின்றன.

விரிந்த பார்வையூடாக பூகோள மாறுதல்களை அவதானித்தால், ஆசியாவின் பொருண்மிய பலசாலி சீனா, இலங்கை அரசின் பலவீனமான பக்கங்களைத் துல்லியமாக கணித்து வைத்திருக்கும் அதேவேளை, அப்பலவீனங்களைத் தனக்குச் சாதகமாக்கித் தன் நகர்வினை விரைவுபடுத்துகிறது என்பதே மறுக்க முடியாத உண்மை. அதேவேளை சீனா, இந்தியாவைச் சுற்றிவளைக்கும் ஒரு நிகழ்ச்சி நிரலாக ஆழ்கடல் துறைமுகங்கள் பாகிஸ்தானில், பங்களாதேசில், மியன்மாரில், இலங்கையில் எனக் கட்டிமுடித்துவிட்டு அந்நாடுகளையும் பொருளதார

ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் சிண்டிகேட் கடன் வழங்கி மூலோபாய உறவு நிலையினை வலுப்படுத்தி நிற்கின்றது.

“பாரிய” மற்றும் “பயனற்ற” சீனக் கடன்களுக்காக நாடு முட்டாள்தனமாகச் சென்று ஒரு “கடன் பொறியில்” சிக்குவதையே ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்விடத்தில் இந்திய-இலங்கை உறவு சீனாவுடனான உறவை விட மிகவும் வித்தியாசமானது. இலங்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்தியா பல யுக்திகளைக் கையாண்டது. தங்கள் உரிமைகளுக்காக அகிம்சை வழியில் போராடிய தமிழர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியது. தந்தை செல்வாவின் காலத்தின் பின்னான அரசியல் தலைவர்களின் நேர்மையற்ற போக்கும், காலகாலமாக இலங்கை அரசு மற்றும் அரசபடைகளினதும் வன்முறை ஒடுக்குமுறை, இனவழிப்புக்கள் மற்றும் தரப்படுத்தல் என்பவற்றால் விரக்தியுற்ற இளைஞர்கள் சுயமாகவே ஆயுதப்புரட்சி தொடங்கிய காலகட்டத்தில் இந்தியா தனது நலன் கருதி அவர்களுக்கு இராணுவப்பயிற்சியும், ஆயுதமும் வழங்கி உள்வாங்கி வளர்த்தது. அன்னை இந்திராவின் மறைவோடு இந்தியாவின் போக்கு மாறியது. இலங்கையை வழிக்குக் கொண்டுவர இந்திய அரசு வளைந்து கொடுத்தும் முயற்சித்தது.

1962 சீனப்படையெடுப்பிற்குப் பிறகு “இந்தியாவின் வட மாநிலங்களில் இராணுவ தொழிற்சாலைகள் அமைப்பதில்லை” எனும் தீர்மானத்தை இந்தியரசு எடுத்ததனால் அதன் முக்கியமான இராணுவத் தொழிற்சாலைகளையும், இராணுவத் தளங்களையும் இந்தியாவின் தெற்கே அமைத்தது. காரணம், இந்துமா கடலில் இலங்கையைத் தவிர வேறு எந்த நாடும் இல்லை. இலங்கையும் இந்தியாவின்

பிராந்திய நலனிற்கு உட்பட்ட நாடு. ஆகையால் இந்தியாவின் தெற்கு ஓர் ஆபத்தற்ற பிரதேசம் என இந்தியரசு கருதியது.

உண்மையில் ஈழத்தமிழர்கள் பலமாக இருக்கும்வரை இந்தியாவுக்கான எந்த ஆபத்தும் இலங்கை மூலம் வரமுடியாத களச்சூழ்நிலையே காணப்பட்டது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தமிழர் பிரதேசம் இருந்த காலகட்டத்தில் எந்தவொரு அந்நிய சக்திகளினாலும் முதலீடு எனும் பெயரிலோ வேறுவழியிலோ இலங்கையில் கால் எடுத்துவைக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது.

ஆனால் இன்று சீனாவின் இலங்கை நகர்வுகளால் இந்தியாவும், மேற்குலகும் இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளன. இந்திய - ரஷ்ய உறவைப் பொறுத்தவரை இந்தியா சிலவிடயங்களை பாடமாக கொண்டுள்ளது. என்னவெனில், எதிர்பாராத வேளையில், “கியூபா ஏவுகணை நெருக்கடி” பற்றிய தகவல்களைப் பயன்படுத்தி, இந்தியா மீது படையெடுப்பின் மூலம் நேருவுக்கு சாமர்த்தியமாக பாடம் கற்றுக்கொடுத்தார் மாவோ. இது நிகிடோ குருசேவுக்கும் விடுக்கப்பட்ட மறைமுகச்செய்தி என்பதால்தான் சோவியத் தலைவர் குருசேவ், இந்திய-சீன போரில் கட்டுப்பாட்டுடன் அடக்கி வாசித்தார்.

1962 அக்டோபர் 25 ரஷ்ய நாளிதழ் ப்ரவாதாவில் “சீனா நமது சகோதரர், இந்தியா நமது நண்பர்” என்று சொன்னதற்கு பிறகுதான் நிலைமையின் தீவிரம் இந்தியாவிற்கு புரிந்தது. சீனாவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, சீனாவுடன் இந்தியா பேச்சுவார்த்தை மேற்கொள்ளவேண்டும் என்றும் ரஷ்ய நாளிதழ் கூறியது. ஆனால், கியூபா பிரச்சனை சரியானவுடன் தனது பழைய கொள்கைக்கே ரஷ்யா திரும்பிவிட்டது என்பது வேறு கதை.

ஆனால் இந்தியப் பகுதிகளை ஆக்ரமிக்கும் தனது எண்ணத்தை மாவோ நிறைவேற்றிக் கொண்டார். 1962 நவம்பர் 21ஆம் நாளன்று சீனா போர் நிறுத்தத்தை அறிவித்து எல்லைப் பகுதியிலிருந்து (Line of Actual Control) 20 கி.மீ தூரத்திற்குப் படைகளைத் திரும்பப் பெற்றது. உண்மையில் இந்தியா பெரும் இழப்புக்களுடன் தோல்வியைக் கண்டது.

நடப்புக் காலகட்டத்தில் இந்திய-மேற்குலக சக்திகள் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவை மட்டுப்படுத்த முடியும் என்று நம்புகின்றன. அதற்கான சகல பிரயத்தனங்களும் நடைபெறுவதன் விளைவே இன்று இலங்கையில் காணப்படும் ஆளும் கட்சிக்குள் நடக்கின்ற இழுபறிகள். சீனாவின் நகர்வுகளுக்கு ஆட்சிமாற்றம் இடையூறாகக் கூடும். அதைத் தடுப்பதற்கும், அதேவேளை சீன இராசவிசுவாசிகளான ராஜபக்ஷ குடும்ப வாரிசு ஆட்சி நிலைப்பதற்கு இன்று உலகில் காணப்படும் சர்வாதிகார ஆட்சியாளர்கள் பட்டியலில் 51 ஆவது ஆட்சியாளராக கோத்தபாயாவை இணைக்கும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இதை எவ்வாறு இந்தியாவும் - மேற்குலகமும் கையாளப் போகிறது? தமிழர்களுக்கான தர்மம் கிடைக்க இயற்கை என்ன திருவுளம் கொண்டுள்ளதோ?

MORTGAGES, REFINANCING & LOANS

HOME OWNERS GET APPROVED

Our Better Rates & Quality Service Is Our Success

Do you need Extra Cash?

We are confident to find the solution. Don't hesitate to contact us"

Bad Credit
Bankruptcy
Consumer Proposal
NO PROBLEM

We do Commercial mortgages 1st and 2nd in GTA and out of GTA
(Hotels, Motels, Plaza, and Vacant Land)

WE BEAT THE INTEREST RATE AND LENDER FEE

Private Lending
95% on 2nd Mortgages Including Condo

Private 2nd Mortgages
upto 95% LTV including CONDO
Unsecured LOC UP TO 50K

Purchase and Refinance:
New Alternate Lending for lower scores- rates starts at 5.5%

Our Goal Is To Help Quality People For Their Mortgages and Finances

NATWEST CAPITAL
TIMES CHANGE, VALUES DON'T
Powered by CENTUM

*Some conditions may apply.

BERNADINE PONNIAH
CEO/MORTGAGE PLANNER LIC. 12546
Tel: 416-550-1364
Email: Bernadine.Ponniah@gmail com
1585 Markham Road, Suite # 304, Toronto, ON M1B 2W1

இப்போது வந்துவிட்டது!

தற்போதைய வைரஸ் தொற்று காலத்தில்,

உங்கள் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து அனைத்து நோய்களிலும் இருந்து உங்களைப் பாதுகாக்க வெளிவந்துவிட்டது

"3 Spoon 100 ஆயுள்"

உள் அடங்கும் பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்

இவை அனைத்தும் ஆயுள்வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது. இதன் மருத்துவ குணங்கள் சொல்லில் அடங்காது. அதிகாலை 3 கரண்டி அருந்தி அனைத்து நோய்களில் இருந்து விடுதலை பெறுங்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை அருந்தலாம். சுவையானது, கனேடிய அங்கீகாரம் பெற்றது. இப்போது அனைத்து தமிழ் குரோசரி (Grocery) கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: Raj - 416.388.5054

நீங்கள் எதிர்பார்த்திருந்த பானம்!

Benefits:

1. இரத்தக்குளாய் அடைப்பை நீக்குகிறது
2. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது
3. நீரிழிவு நோயாளர்களுக்கு மிகவும் உகந்தது
4. உடலில் உள்ள தேவையற்ற கழிவை அகற்றி குடலை சுத்தமாக்குகிறது
5. உடல் பருமனை குறைக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
6. மலச்சிக்கலை அறவே நீக்குகிறது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்
7. தூக்கமின்மையை இல்லாமல் ஆக்குகிறது.
8. உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பினைக் குறைக்கிறது
9. உடல் சோர்வை நீக்குகிறது

பருகும் முறை:

நன்றாகக் கலக்கி ஒவ்வொரு நாளும் அதிகாலையில் மூன்று கரண்டி அருந்தவும்.
பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
Note: நீங்கள் இரத்தக்குழாய் அடைப்பிற்காக மருத்துவரால் சத்திர சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், 6 மாத காலத்தில் இரத்தக் குழாய் அடைப்பை அறவே நீக்குகிறது.

3 ஸ்பூன் 100 ஆயுள்
3 Spoon100 Life

(சுவையானது)

ஒவ்வொருவரும் அருந்த வேண்டிய பானம்

ஆயுள் வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது.

மருந்து உணவல்ல, உணவே மருந்து.

Heart Attack இல் இருந்து பாதுகாக்கிறது.

NOW $ 20
$ ~~35~~

1. Removing the blood vesse blockae.
2. regulates bood flow
3. Good for diabetes people
4. Remove your body's unnecessary wast
5. Reduces obesity and increases resistance
6. Eliminate constipation, cures ulcer
7. Reject lack of sleep
8. Excess fat in the body dissolve
9. Elima=inate body fatigue

Ingredients: Garlic, Lemon, Vinegar, Ginger, Honey and Black Jeera

Buying Locations: For Distribution Call **416-388-5054** / Montreal No: **514-589-7617**
Soon all Grocer Stores: Scarborough -Markham - Mississauga - Brampton - Ajax

Now Available Stores: **New Spiceland, Pasumai Santhi, Suncity Supermarket, Poorani Villas, Vasantham Super Market**

LONGO LAWYERS
www.longolawyers.ca

Shenthuran Subramaniam
B.Sc.,M.B.A., J.D.
Personal Injury Lawyer

4950 Yonge Street,
Suite 401, Toronto,
ON. M2N 6K1

Cell: 647-992-2417 | Phone: 416-800-4232
Fax: 416-800-6247 | Toll Free: 1-844-800-4232

DESIGNER FRAMES & SUNGLASSES
UNBEATABLE COSTS
20+ YEARS OF PROFESSIONAL SERVICES AS A LICENSED OPTICIAN AND CONTACT LENS FITTER AT HAKIM OPTICAL ON SITE OPTOMETRIST (EYE EXAMS)
INSURANCE PLANS WELCOME (DIRECT BILLING AVAILABLE)

Sarojini Shantharajah
Licensed Optician + Contact Lens Fitter

Tel: (416) 293-2020
Email: info@poweroptical.ca
SUN CITY PLAZA
2761 MARKHAM ROAD UNIT D34 SCARBOROUGH,
ONTATRIO, M1X 0A4

BRIGHT VIEW
WINDOWS, DOORS &
PORCH ENCLOSURES

FIBER GLASS DOORS
UPTO 40% OFF

FOR FREE ESTIMATE CALL
647.701.7979

Unit #14, 400 Finchdene Square,
Scarborough ON, M1X 1E2

இலங்கையின் இனவன்முறை வரலாறு

தொடர் – 14

தொகுப்பு: தேசமுகி

பண்டாரநாயக்காவிடம் தாராளவாத ஜனாநாயக அரசியல் கருத்து செல்வாக்கு பெற்றிருந்த காலப்பகுதி 1926. அந்நேரம் தான் இலங்கைக்கான சிறந்த அரசியல் முறைமை என்பது சமஸ்டியே என்கிற கருத்து அவரிடம் குடிகொண்டிருந்தது. அதனால் தான் கரையோரச் சிங்களவர், கண்டியச் சிங்களவர், வடக்கில் தமிழர்கள் என மூன்றாக பிரிக்கப்பட்ட கூட்டாட்சி முறை இலங்கைக்கு பொருந்தும் என்றார். இவ்வாறு சொன்ன அதே எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க அவர்கள் நம்பகத்தன்மையின் முரண்பாடு என்னவெனில் ஒரு சில வருடங்களிலேயே அவர் அரசியல் தலைமைக்கு வருவதாயின் அதற்குரிய குறுக்குவழி சிங்கள பௌத்தத் தனத்துக்கு தலைமை கொடுப்பதே என்பதை கணித்து, விரைவாகவே தன்னை அதற்காக தயார்படுத்தி தகவமைக்கவும் செய்தமையேயாகும்.

அதனடிப்படையில் 1933 இல் தன்னைப் பௌத்தராக அத்தநாகல்ல கோவிலில் பிரகடனப்படுத்தியதோடு, 1934இல் “சிங்கள மகாசபை”யை தோற்றுவித்து இனவாத பிரசாரங்களை எவ்வாறு செயல்படுத்தினார் எனும் வரலாற்றை பார்க்கும் பொழுது: பண்டாரநாயக்கவின் அக, புறத் தோற்ற மாற்றங்கள் அனகாரிக தர்மபாலாவை ஒத்துள்ளதைக் காணலாம். பண்டாரநாயக்க முதன்மையாக அரசியல் அதிகாரத்திலும், தர்மபாலா தார்மீக சீர்திருத்தத்திலும் அக்கறை கொண்டிருந்தாலும், அங்கே சிங்களத்தை அவர்கள் எவ்வாறு பார்த்தார்கள் என்பதில் கட்டமைப்பு மற்றும் நடைமுறையில் பொதுவான தன்மைகள் உள்ளன.

கடந்த காலங்கள் மற்றும் பௌத்தம் தழுவல் - பெரிய வரலாற்றை சுட்டிக்காட்டும் பொதுவான தன்மைகள் அவர்கள் செயல்பட்ட சொற்பொழிவுகள். அவர்களின் வாழ்க்கை சுருக்கமாக ஒன்றுடன் ஒன்று பொருந்துவதாகவே உள்ளது. ஆனால் அவர்களுக்கிடையில் நேரடித் தொடர்புகள் இருந்ததற்கான எந்தவொரு ஆதாரமும் இல்லை. தர்மபாலாவைப் போல, சிங்கள தேசியவாத சொற்பொழிவில் பண்டாரநாயக்க ஒரு நாயகனாக நினைவு கூரப்படுகிறார்.

தர்மபாலாவை விட ஒரு அரசியல்வாதியாக பண்டாரநாயக்கா பகிரங்கமாக இருந்ததால், இலங்கைத் தேசியத்தை தன் சுயலாப அரசியல் நோக்கிற்காக பயன்படுத்திய வேளைகளில் ஒரு உணர்வுக்கான அவரது உறவு நம்பகத்தன்மை பதட்டங்கள் மற்றும் முரண்பாடுகளால் நிறைந்ததாக காணப்படுகிறது.

இலங்கையின் வரலாற்றை எடுத்து உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தால் ஆட்சிக்காக பதவிக்காக அரசியலுக்காக மதம் மாறியவர்கள் சரித்திரம் மட்டுமல்லாது பூர்வீகம் தமிழர்களாக இருந்து சிங்களவர்களாக மாறியவர்கள் வரலாறும் கண்ணில்படும். உதாரணமாக “தெமல கத்தற” சாதியினரின் தோற்றம் பற்றி அறியும் பொழுது எல்லாளன் - துட்டகைமுனு சண்டைக் காலத்தைச் சேர்ந்தது என்று அடையாளம் காண முடிகிறது என்றும் துட்டகைமுனு - எல்லாளன் சண்டையில் எல்லாளன் படை தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் கைதுசெய்யப்பட்ட எல்லாளனின் படையினர் சிங்களவர்களைத் திருமணம் செய்துகொண்டு கலந்து உருவான சந்ததியினரே தமிழ் “கத்தற” என்கிற நம்பிக்கை பிரைஸ் ராயன் என்னும் ஆய்வாளரிடம் அதிகம் காணப்படுகிறது.

உண்மையில் சிங்களவர்கள் ஒன்றும் பிறவிப் பௌத்தர்கள் அல்லர். இந்தியாவில் பௌத்தம் செல்வாக்கு பெற்று இருந்த காலத்தில் இலங்கையிலும் பௌத்தத்தின் செல்வாக்கு வளர்ந்தது. அது பெரும்பாலும் அரச குடிகள், மன்னர்கள், ஆட்சியாளர்கள் மட்டத்திலேயே அதிகம் செல்வாக்கு பெற்றது. மக்கள் மத்தியில் தமிழ் மக்களிடத்தில் பௌத்தம் வளர்ச்சியடைந்தது போல் சிங்கள மக்களிடத்தில் அது பெரிதாக எடுபடவில்லை. அவர்கள் குலதெய்வங்களையும், காவற் தெய்வங்களையும் பண்டைய முறைப்படி வழிபட்டு வந்தனர். துட்டகைமுனு கூட முருகனை வழிபட்டுவிட்டுத்தான் எல்லாளனுடன் சண்டைக்குப் போனான் என்று வரலாறு கூறுகிறது. இன்றுவரை சிங்களவர்களுடைய உலகியல் வாழ்க்கைக்கான வழிபாட்டுமுறை புராதன வழிபாடாகவே உள்ளது. பௌத்தமும் புத்தரும் அவர்களுக்கான அடையாளம், கௌரவம், அரசியல். அதை உருவாக்கியவர் அனகாரிக தர்மபால.

சிங்களவர்களுக்கு இந்தியா பற்றிய அச்சம் என்றும் இருந்துகொண்டேயிருக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டின் தமழிர்கள் பற்றிய பயம். இப் பெரும்பான்மைத் தமிழர்களை எதிர்கொள்வதற்கான பலத்தை சிறுபான்மைச் சிங்களவர்கள் எப்படி வளர்த்து கொள்ளலாம் என யோசித்தார் அனகாரிக தர்மபால.

ஒரே வழி, தமிழர்களை விட பெரும்பான்மையான சனத்திரளுடன் சேர்த்து தம்மை அடையாளப்படுத்துவது. ஜப்பான், சீனா, கொரியா, தாய்வான், தாய்லாந்து போன்ற தூ ரகிழக்கு நாடுகளுடன் ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதுதான் அதற்கான பாலம் என்று எண்ணி சிங்கள பௌத்த பேரினவாதத்தை வளர்த்த அனகாரிக தர்மபாலவும் பண்டாரநாயக்க போல் பிறப்பின் போது ஒரு கிறிஸ்தவரே!

1864 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று ஒரு வர்த்தக குடும்பத்தில் பிறந்த இவரது இயற்பெயர் டொன் டேவிட் ஹேவாவிதாரண. தந்தையார் மாத்தறை டொன் கரோலிஸ் ஹேவாவிதாரண, தாயாரின் கன்னிப் பெயர் மல்லிகா சிறீமதி தர்மகுணவர்த்தன. டொன் டேவிட்டும் கொழும்பு தெமட்டகொட ஆரம்ப கல்வியை பப்ரிஷ் பாடசாலையிலும், கொட்டாஞ்சேனை புனித பெனெடிக் வித்தியாலத்திலும் பின்னர் கோட்டேயிலிருந்த கிறிஸ்தவக் கல்லூரியிலும், முகத்துவாரம் புனித தோமஸ் வித்தியாலத்திலும் அதன்பின் கொழும்பு அக்கடமியிலும் பயின்றார். அப்போது, இலங்கையில், தேசிய உணர்வு தலை தூக்கத் தொடங்கிய காலம். இலங்கையின் வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பௌத்த மதத்துக்குச் சார்பான நிலைமைகள் தோன்றிய காலகட்டம்.

1875 ஆம் ஆண்டு நியூ யோர்க்கில், கேர்ணல் ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் என்பவரும், பிளவத்ஸ்கி (ரஷ்ய அமெரிக்கர்) அம்மையாரும், மற்றும் வில்லியம் குவான் ஜட்ஜ் எனபவரும் பிரம்மஞான சபையை (வுாநழளழிாஉையட ளுழஉநைவல) நிறுவினர். அவர்கள் புத்த மதத்தின்பால் ஈர்ப்புக் கொண்டிருந்தனர். 1880 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த ஒல்கொட் அடிக்கடி இலங்கைக்கு வந்து பௌத்த கல்வி வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார். இவர் 300 பௌத்த பாடசாலைகள் வரை நிறுவினார். இவற்றுட சில இன்றும் உள்ளன. இலங்கையில் பௌத்த மதத்தை நிலைநாட்டுவதில் மிகப்பெரும் பங்காற்றிய கேர்ணல் ஒல்கொட்டிற்கு இளைஞனாக இருந்த தர்மபால அவரது பணிகளில் உதவி வந்தார். பெரும்பாலும் ஒல்கொட்டிற்கு ஒரு மொழிபெயர்ப்பாளராகச் செயல்பட்டார். பிளவத்ஸ்கி அம்மையாரோடும் நெருங்கியவராக இருந்த தர்மபாலவுக்கு, பாளி மொழியைக் கற்கும்படி அம்மையார் ஆலோசனை வழங்கினார். இக் காலத்திலேயே இவர் தனது பெயரை, தர்மத்தின் காவலன் எனப் பொருள்படும், தர்மபால என்று மாற்றிக்கொண்டார்.

மணமுடிக்காமல் பௌத்தத்துக்காக முழுமையாக உழைக்கும் ஒருவரையே அனகாரிக (வீடற்றவர் அல்லது உண்மையைத் தேடுபவர்.) எனப்படுகிறார். அவ்வகையில் தர்மபாலாவே முதலாவது அனகாரிக எனப்படுகிறார். பிக்குவைப்போல மஞ்சள் உடை தரித்தபோதும் அவர் ஒரு பிக்குவாக இருக்கவில்லை. அன்பையும், கருணையையும், சமாதானத்தையும், அகிம்சையையும் போதித்த புத்தரின் பெயரால் ஒரு அநாகரீக விசவித்தை விதைத்தவர் இந்த அனகாரிக தர்மபால என்றால் மிகையகாது.



மூடினாலும் குற்றம் மூடாவிட்டாலும் குற்றம்

வித்தகன்

தென்னிலங்கையின் அரசியலை தீர்மானிப்பவராகவும் பெரு ம்பான்மையினத்தவரான சிங்கள அரசியல்வாதிகளின் பிரசார முதலீடாக இருந்தவருமான விடுலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனினதும் விடுதலைப்புலிகளதும் சகாப்தம் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிவுக்கு வந்த பின்னர் தென்னிலங்கை அரசியலில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. பிரபாகரனையும் விடுதலைப்புலிகள் அமைப்பையும் வைத்தே 30 வருடங்களாக அரசியல் செய்து வந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு அவர்களின் முடிவுக்கு பின்னர் சிங்கள மக்களை கவரக்கூடிய, ஆட்சியை தீர்மானிக்க கூடிய பிரசார ஆயுதம் கிடைக்கவில்லை.

எனினும் யுத்தத்தை முடித்தபோது ஆட்சியிலிருந்த ராஜபக்சவினர் அந்த யுத்த வெற்றியை தமது அரசியல் மூலதனமாக்கி அதற்குள் சிங்கள மக்களை மூழ்கடித்து 2015ஆம் ஆண்டு வரை ஆட்சியைக்கொண்டு நடத்தினர். நாட்கள் செல்ல செல்ல யுத்த வெற்றி மாயையிலிருந்து மக்கள் விடுபடத்தொடங்கி தமது வாழ் வாதரப்பிரச்சினைகள் ,மனித உரிமைகள், நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் கவன செலுத்தத்தொடங்கியதால் 2015ஆம் ஆண்டு ராஜபக்ச ஆட்சி வீட்டுக்கு அனுப்பப்பட்டு மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு ஆட்சி பீடமேறியது. தமிழ்,முஸ்லிம் கட்சிகளின் ஆதரவோடு நல்லாட்சி அரசு ஆட்சியை கொண்டு சென்றநிலையில் எதிர்த்தரப்பிலிருந்த ராஜபக்ச தரப்பு அதற்கு முரணான வகையில் இனவாத ரீதியிலான அரசியலையே முன்னெடுத்தது.

ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள வேண்டும் என்ற துடிப்பிலிருந்த ராஜபக்ச தரப்புக்கு “அலாவுதீனின் அற்புத விளக்கு” போன்று 21-04-2019 ஆண்டு கிடைத்தவர்தான் “ஷஹ்ரான்”. முழு நாட் டையும் கதிகலங்க வைத்த “உயிர்த்த ஞாயிறு” தின தற்கொலைக்குண்டுத்தாக்குதல்களை தேவாலயங்களிலும் நட்சத்திரக் ஹோட்டல் களிலும் நடத்தி 250க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்டு 500 க்கும் மேற்பட்டவர்களை படுகாயப்படுத்தி இலங்கையை மீண்டுமொரு யுத்த நிலைக்கு கொண்டு சென்றதுடன் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டிருந்த ராஜபக்ச தரப்புக்கு இனவாத ஒட்சிசனை வழங்கி மீண்டும் ஆட்சி பீடம் ஏற வைத்தவர்தான் இந்த ஷஹ்ரான்.

1970 களிலிருந்து தமிழ்மக்களை தமது விரோதிகளாக்கி, எதிரிகளாக்கி ஆட்சிபீடங்களை அலங்கரித்து வந்த பேரினவாத அரசுகளுக்கு உறுதுணையாக இருந்த முஸ்லிம்கள் 21-04-2019 ஆம் ஆண்டு முதல் பெரும்பான்மையினராக சிங்களவர்களின் விரோதிகளாக ,எதிரிகளாக்கப்பட்டனர். அன்று முதல் இன்று வரை முஸ்லிம்களை மையமாக வைத்தே தென்னிலங்கையின் அரசியல் நகர்ந்து வருகின்றது. கடந்த 30 வருடங்களாக தமிழ் மக்கள் அனுபவித்த வேதனைகள், சோதனைகள், பழிவாங்கல்களையெல்லாம் தற்போது சிங்களவர்களின் எதிரிகளாக்கப்பட்டுள்ள, முஸ்லிம் பயங்கரவாதிகளாக்கப்பட்டுள்ள, இந்த நாட்டுக்கு ஆபத்தானவர்களாக்கப்பட்டுள்ள இந்த நாட்டின் இன்னொரு சிறுபான்மையினமான முஸ்லிம்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்த நாட்டை ஆட்சி செய்த அரசுகள், இனவாத அரசியல் செய்த கட்சிகள்,நாட்டிலுள்ள சட்டங்கள், முப்படைகள் எப்படியெல்லாம் தமிழினத்துக்கு எதிராக செயற்பட்டனவோ, அநீதிகளைக்கட்டவிழ்த்து விட்டனவோ அத்தனையும் இன்று அடுத்த சிறுபான்மையினமான முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டுள்ளன. அன்று எந்த தமிழனைப்பார்த்தாலும் புலியாகத்தெரிந்த சிங்களவர்களின் கண்களுக்கு இன்று எந்த முஸ்லிமைப் பார்த்தாலும் ஷஹ்ரானாகவே தெரிகின்றது. அதனால்தான் அன்று எவ்வாறு தமிழினத்தை எதிர்த்தார்களோ வெறுத்தார்களோ அதேபோன்று இன்று முஸ்லிம்களையும் எதிர்க்கின்றனர், வெறுக்கின்றனர். தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை எப்படி தமது பேரினவாத அரசியலுக்காக பயங்கரவாதப்போராட்டமாக மாற்றினார்களோ அதே போன்று இன்று ஏதுமறியா அப்பாவி முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக்கி உள்ளனர்.

அரசியல்வாதிகளின் இனவாதம், முப்படைகளின் முற்றுகையினால் மட்டுமன்றி சிங்களவர்களின் கோபப்பேச்சுக்கள் ,ஏளனப்பார்வைகள், இஸ்லாம் மதம் தொடர்பான கீழ்த்தரமான விமர்சனங்கள், முஸ்லிம் என்ற புறக்கணிப்புக்கள் ,முஸ்லிம்பெண்களின் ஆடைகள் தொடர்பான கருத்துக்கள் எனப்பல பலவாறும் முஸ்லிம் மக்கள் உடல், உள ரீதியாகவும் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் பெரும்பாலான சிங்கள, ஆங்கில ஊடகங்கள் கூட தமிழர்களின் போராட்டத்தை எப்படி கொடூர பயங்கரவாத போராட்டமாக திரிபுபடுத்தினவோ அதேபோன்றே முஸ்லிம் அரசியல் தலைவர்கள், முஸ்லிம் மக்கள், பள்ளிவாசல்கள், அரபுக்கல்லூரிகள், மதரசாக்கள், முஸ்லிம் அமைப்புக்கள் தொடர்பில் ஊதிப்பெருப்பிக்கும் வகையிலேயே செய்திகளை வெளியிடுகின்றன.

இவ்வாறான நிலையிலேயே முஸ்லிம் மக்கள் மீதான ஹலால் தடை, அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதிகள் புறக்கணிப்பு கொரோனா ஜனாஸா தகனம், 11 முஸ்லிம் அமைப்புகளுக்குத் தடை, முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கைது, புர்கா தடை என இந்த அரசின் பழிவாங்கல்கள் முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடர்கின்றன. இதில் முஸ்லிம் மக்களின் புனித நோன்பு காலத்தில் அவர்களின் அரசியல் தலைவர்களில் ஒருவரான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீனும் அவரது சகோதரன் ரிஜாஜ் பதியுதீனும் நள்ளிரவில் வீடு புகுந்து பொலிஸ ாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சம்பவமும் அதன் தொடர்ச்சியாக முஸ்லிம் பெண்களின் “புர்கா ஆடை”யைத் தடை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கான அமைச்சரவை அனுமதியும் முஸ்லிம் மக்களை மிகவும் நோகடித்துள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பி.யுமான ரிசாத் பதியுதீனின் கைதும் முஸ்லீம் பெண்களின் “புர்கா ஆடை” மீதான தடையும் “உயிர்த்த ஞாயிறு” தற்கொலைக்குண்டுத்தாக்குதல்களை மையப்படுத்தியே இடம்பெற்றுள்ளன. “உயிர்த்த ஞாயிறு” தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை நடத்தியவர்களை உதவிய குற்றச்சாட்டில் ரிசாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்த கடந்த நல்லாட்சி அரசில் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபாரிசுக்கமைவாகவே தற்போது “புர்கா ஆடை” மீதான தடைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சஹ்ரான் தலைமையிலான குழு-வினரால் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் மேற்-கொள்ளப்பட்ட தற்கொலைகுண்டுத் தாக்கு தலை தொடர்ந்து அப்போ-தைய ஜனாதிபதி மைத்திரிபால சிறி-சேனவினால் நாட்டில் அமுல்படுத்தப்-பட்ட அவசரகால சட்ட பிரகடனத்தின் ஊடாக “புர்கா” உள்ளிட்ட முகத்தை மூடும் ஆடைகளுக்குத் தடை விதிக்-கப்பட்டது.இந்த தடை 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 22ஆம் திகதி வரை தொடர்ந்-தது. எனினும் ஓகஸ்ட் 22ஆம் திக-திக்கு பின்னர் அவசர காலச் சட்டம் நீடிக்கப்படாமையினால் “புர்கா” விற்-கான இந்த தடை செயலிழந்தது. இவ்வாறான நிலையில் “உயிர்த்த ஞாயிறு தற்கொலைகுண்டுத் தாக்-குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்கு-ழுவின் இறுதி அறிக்கையில் “புர்கா” வினை தடை செய்யுமாறு சிபாரிசு செய்யப்பட்டது.

> “கொரோனா தடுப்பு விதிமுறை சட்டத்தில் முகத்தை மூடாவிட்டால் தண்டனை. “புர்கா ஆடை” தடை சட்டத்தில் முகத்தை மூடினால் தண்டனை. அதாவது முகத்தை மூடாவிட்டாலும் தண்டனை முகத்தை மூடினாலும் தண்டனை என்பதே கோத்தபாய ராஜபக்ச அரசின் சட்டம்”

16ஆம் பக்கம் பார்க்க...

முதல்வராக நாளை பதவியேற்கிறார் மு.க.ஸ்டாலின்

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நாளை (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு தமிழக முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு நேற்று முன்தினம் ஆளுநரிடம் வழங்கினார். அன்று மாலை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திமுக எம்எல்ஏக்கள் கூட்டத்தில் சட்டப்பேரவை திமுக குழு தலைவராக, ஸ்டாலின் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

இதையடுத்து நேற்று காலை, தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை மு.க.ஸ்டாலின் சந்தித்தார். ஸ்டாலினுக்கு, ஆளுநர் பொன்னாடை போர்த்தி மலர்கொத்து வழங்கி, வாழ்த்து தெரிவித்தார். அப்போது, சட்டப்பேரவை திமுக குழு தலைவராக தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதத்தை ஆளுநரிடம் வழங்கிய ஸ்டாலின் ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதையடுத்து, திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை தமிழக முதலமைச்சராக நியமித்த ஆளுநர் பன்வாரிலால் புரோகித், பதவியேற்க வருமாறு, ஸ்டாலினுக்கு, முறைப்படி அழைப்பு விடுத்தார். இதற்கான கடிதத்தை, ஆளுநரின் செயலாளர் ஆனந்தராவ் பாட்டீல், ஸ்டாலினை அவரது வீட்டில் சந்தித்து வழங்கினார்.

ஆளுநர் மாளிகையில் நாளை காலை, 9 மணிக்கு நடைபெறும் பதவியேற்பு விழாவில், தமிழக முதலமைச்சராக ஸ்டாலின் பதவியேற்கவுள்ளார். அவருக்கு, ஆளுநர் பன்வாரிலால் புரோகித் பதவிப் பிரமாணம் செய்து வைக்கவுள்ளார். ஸ்டாலினுடன் அமைச்சர்களாக 28 பேர் பதவியேற்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆளுநர் முன்னிலையில், அனைத்து அமைச்சர்களும் பதவியேற்பு உறுதிமொழியை எடுத்துக் கொள்ள உள்ளனர். கொரோனா பரவல் காரணமாக பதவியேற்பு விழா, எளிமையாக நடைபெற உள்ளது. விழாவில் பங்கேற்க, குறைந்த நபர்களை மட்டும் அழைக்க, முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எதிர்க்கட்சி தலைவர் யார்? அதிமுக ஆலோசனை

சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் யார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ள நிலையில், அதிமுக எம்எல்ஏக்கள் சென்னையில் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதிமுக எம்எல்ஏக்கள் கூட்டம் நாளை மறுநாள் சென்னையில் நடைபெறவுள்ளது. சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரை தேர்வு செய்வதில் அக்கட்சியினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், முன்னாள் அமைச்சர் ஒருவரை எதிர்க்கட்சி தலைவராக தேர்வு செய்வது குறித்து சென்னையில் சில எம்எல்ஏக்கள் நட்சத்திர ஹோட்டலில் தனியாக ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் முகாமிட்டிருப்பவர்கள் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து வாழ்த்து பெறவில்லை என்றும் கூறப்படுகிறது. இதற்கிடையே, அதிமுக ஒருங்கிணைப்பாளரான ஓ.பன்னீர் செல்வத்தை எதிர்க்கட்சி தலைவராக தேர்வு செய்யலாம் என அதிமுக செய்தி தொடர்பாளர் கோவை செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு ஆட்சி போன்று ஸ்டாலின் ஆட்சியும் கலைக்கப்படும்

ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னர் அ.தி.மு.க பிளவுபடாமல் இருந்திருந்தால் தி.மு.க தற்போது ஆட்சியை கைப்பற்றியிருக்காது என காரைக்குடி பா.ஜ.க தேசிய அமைப்பாளர் ஹெச்.ராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது தமிழகத்தில் ஆட்சிக்கு வந்துள்ள தி.மு.க ஆட்சிக்கு எனது வாழ்த்துக்கள்.100 நாட்களுக்கு நான் தி.மு.க ஆட்சியினை விமர்சிக்கப்போவதில்லை. காரணம் ஸ்டாலின் கூறியது போன்று 100 நாட்களில் மக்கள் பிரச்சினைகளை சீர்செய்ய வேண்டும் என எச்சரிக்கை விடுக்கின்றேன்.

அன்று எம்.ஜி.ஆர் மறைவிற்கு பின்னர் அ.தி.மு.க பிளவுப்பட்டதால் 1989 இல் கருணாநிதி ஆட்சிக்கு வந்தார் .அதேபோல் இன்றும் அ.தி மு.க பிளவுப்பட்டதன் காரணமாகவே தி.மு.க தற்போது ஆட்சிக்கு வந்தது.எதிரியின் பலவீனத்தால் மாத்திரமே ஆட்சிக்கு வந்துள்ளனர்.

ஆனால் எல்லை தாண்டி இந்தியாவினுடைய பிரச்சினைகள் இலங்கைக்கு செல்கின்றது என்பதற்காகவே அன்று தி.மு.க வின் - கருணாநிதி ஆட்சி சந்திரசேகர் அவர்களால் கலைக்கப்பட்டது, எனக் கூறி அது போன்று நடவடிக்கை எடுபடுவதற்கு எடுக்கப்படலாம் என மறைமுகமாக ஊடகங்கள் முன் கூறியுள்ளார்.

8 சிங்கங்களுக்கு கொரோனா

ஐதராபாத்தில் நேரு உயிரியல் பூங்காவில் இருந்த 8 சிங்கங்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கொரோனா தொற்று தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் பலரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், தற்போது ஹைதராபாத்தில் உள்ள நேரு உயிரியல் பூங்காவில் உள்ள 8 சிங்கங்களுக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டது. இதில், 8 சிங்கங்களுக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவில், மனிதர்களிடமிருந்து விலங்குகளுக்கு கொரோனா தொற்று பரவி இருப்பது இதுவே முதல் முறையாகும்.

இதுகுறித்து, சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சக தலைமை அதிகாரி கூறுகையில், கடந்த 1 வாரத்திற்கு முன்னரே, சிங்கங்களிடம் சில அறிகுறிகளை கண்டோம். அதையடுத்து, அந்த சிங்கங்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனையில் அவைகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அந்த சிங்கங்களை தனிமைப்படுத்தியதாகவும், மருத்துவ சிகிச்சை அளித்து வருவதாகவும் கூறினார்.

மக்களின் பேராதரவில் பேரியக்கமாக நாம் தமிழர் கட்சி; சீமான் நெகிழ்ச்சி

மக்கள் தமக்கு வழங்கியுள்ள ஆதரவு புத்தெழுச்சியை ஏற்படுத்தியுள்ளதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி இரண்டு பிரதான கட்சிகளுக்கு அடுத்து முப்பது இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று மூன்றாவது கட்சியாக உருவெடுத்துள்ளது.

இந்நிலையில், தேர்தல் முடிவுகள் தொடர்பாக சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், கூட்டணி இன்றித் தனித்துவமான கொள்கைகளை முன்வைத்து போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி படித்த இளைஞர்கள், எளிய பெண்களை வேட்பாளர்களாக முன்னிறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், நாம் தமிழர் கட்சி இந்தத் தேர்தலை மிகவும் எழுச்சிகரமாகச் சந்தித்தபோது தமக்குக் கிடைத்த ஆதரவைப் பார்க்கும்போது மக்கள் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள் என்ற புத்தெழுச்சியை வழங்கியிருப்பதாக சீமான் தெரிவித்துள்ளார்.

கனடா செய்திகள்

ஹெல்த் கனடாவால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தடுப்பூசிகளும் பாதுகாப்பானவை

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

கனேடியர்களுக்கு நோய்த்தடுப்பு நிபுணர்களின் மிகச் சமீபத்திய COVID-19 தடுப்பூசி ஆலோசனை குறித்து கவலை தெரிவித்த பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தடுப்பூசிகளும் பாதுகாப்பானவை என்றும் கூறியுள்ளார்.

கனடாவில் உள்ள அனைத்து தடுப்பூசிகளும் ஹெல்த் கனடாவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கான எங்கள் ஆலோசனை மாறவில்லை என்று ட்ரூடோ கூறினார். உங்கள் தடுப்பூசி முறை வந்தவுடன், உடனடியாக பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்போது NACI 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வகை தடுப்பூசியை பெற பரிந்துரைக்கவில்லை. அஸ்ட்ராஜெனெகா மற்றும் ஜான்சன் & ஜான்சன் தடுப்பூசி பெற விருப்பம் இல்லை என்றால், ∴பைசர் அல்லது மாடர்னா தடுப்பூசி பெறும் வரை காத்திருக்கலாம்.

நான்கு COVID-19 தடுப்பூசிகளில் அனைத்தும் பாதுகாப்பானவை, பயனுள்ளவை மற்றும் எந்தவொரு வயதுவந்தோருக்கும் வழங்கப்படலாம்.

இதன் முக்கிய அம்சம் என்னவென்றால், நாம் அனைவரும் விரைவில் தடுப்பூசி போட வேண்டும் என பிரதமர் கூறினார்.

தலைமை பொது சுகாதார அதிகாரி டாக்டர் தெரசா தாம், கனடியர்கள் ஹெல்த் கனடா பரிந்துரைத்த தடுப்பூசியைப் பெறுவதில் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். ஏனெனில் அவை அனைத்தும் பயனுள்ளவை என்று கூறினார். எவ்வாறாயினும், மக்கள் தங்கள் தனிப்பட்ட இடர் கணக்கீட்டின் அடிப்படையில் தங்கள் சொந்த முடிவை எடுக்க முடியும் என்று அவர் கூறினார்.

ரொறன்ரோ விமான நிலைய பணியாளர்களுக்கு கொரோனா

ரொறன்ரோ விமான நிலைய தனிமைப்படுத்தல் விடுதியில் 13 பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து ரொறன்ரோவுக்கு வருவோர் தனிமைப்படுத்தப்படும், கிறவுண் பிளாசா விடுதியின் பணியாளர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோடை காலத்தில் வெளிநாட்டு பயணம்

பிரதமர் நம்பிக்கை

வருகின்ற கோடை காலத்தில் கனடிய மக்கள் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளமுடியும் என கனடிய பிரதம மந்திரி Justin Trudeau நம்பிக்கை வெளியிட்டுள்ளார், நேற்றைய தினம் நடந்த செய்தியாளர் மகாநாட்டில் இதனை அறிவித்த பிரதமர் கனடா மற்றைய உலக நாடுகளுடன் இணைந்து பயணிகள் covid -19 தடுப்பூசியினை பெற்றுக்கொண்டதுக்கான உறுதி பத்திரத்தினை சமர்பிக்கும் பட்சத்தில் பயணங்களை மேற்கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

கனேடிய அரசாங்கம் தற்போது ஐரோப்பிய நாடுகளுடன் தற்போது வெளிநாட்டு பயணங்கள் தொடர்பாக ஆலோசித்து வருவதாகவும் பயணிகள் covid-19 தடுப்பூசியினை பெற்றுக்கொண்டதுக்கான அத்தாட்சி பத்திரத்தினை எந்த வடிவத்தில் சமர்பிக்க முடியம் என்பது பற்றி விரிவாக ஆலோசித்து வருவதாகவும் கனேடிய பிரதம மந்திரி மேலும் தெரிவித்தார்

Bloc Québécois கட்சி தலைவர் Yves-François Blanchet வெளிநாட்டு பயணிகளுக்கு தடுப்பூசி கடவுச்சீட்டு வழங்கும் திட்டத்தினை தான் ஆதரிப்பதாகவும் ஆனாலும் அமெரிக்கா மற்றைய நாடுகளுடன் இந்த தடுப்பூசி கடவுச்சீட்டு திட்டத்துக்கு ஒத்துழைப்பு தருவதாக தெரியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கனடா எல்லையைத் திறப்பது எப்போது?

கனடா, அமெரிக்காவுடனான எல்லை எப்போது திறக்கப்படும் என்ற கேள்விக்கு கனேடிய நிபுணர்கள் பதிலளித்துள்ளனர்.

கனடா அமெரிக்காவுக்கு இடையிலான எல்லை, சுற்றுலா போன்ற அத்தியாவசியமற்ற தேவைகளுக்காக 2020 மார்ச் முதலே மூடப்பட்டுள்ளது.

எல்லை மூடுதல் தொடர்பான இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தம், மே மாதம் 21ஆம் திகதி புதுப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த ஒப்பந்தத்தின் கீழ், இறுதிச்சடங்கு முதலான காரணங்களுக்காகவும், அகதி நிலை கோரி விண்ணப்பித்தல் முதலான காரணங்களுக்காகவும் மட்டும் மக்கள் எல்லை வழியாக அனுமதிக்கப்படுவார்கள்.

ஆனால், முன்போல் எப்போது நம்மால் எல்லை தாண்டி தினமும் சென்றுவர முடியும் என்ற கேள்வி பலரது மனங்களிலும் ஒலிக்கிறது.

அந்த கேள்விக்கான என்னுடைய பதில், அதற்கு மிக மிக நீண்ட காலம் ஆகும் என்பதுதான் என்கிறார் வெளியுறவுக் கொள்கை நிபுணரான யுயசழடெ நுவவபைநச.

இன்னும் சில மாதங்களுக்காவது எல்லை மூடியே இருக்கும் என தான் நம்புவதாக தெரிவிக்கிறார் யுயசழடெ. 2021 இலையுதிர்காலம் வரையிலாவது எல்லை மூடித்தான் இருக்கும் என்கிறார் அவர்.

அதற்குக் காரணம், கடந்த ஆண்டு இருந்ததை ஒப்பிடும்போது, இப்போதைய நிலைமை அதைவிட 10 மடங்கு மோசமாக இருப்பதுதான் என்று யுயசழடெ கூறுகிறார்.

அமெரிக்கா, கனடாவை விட அதிக அளவில் தன் குடிமக்களுக்கு தடுப்பூசி போட்டுவிட்டது என்று கூறும் யுயசழடெ, அதனால் எல்லைப் பிரச்சினை எளிதில் தீராது என தான் கருதுவதாக தெரிவிக்கிறார்.

ஆகவே, கனேடிய சுற்றுலாப்பயணிகளை எல்லை தாண்டி கனடாவுக்குள் அனுமதிக்க அமெரிக்கா அந்த அளவுக்கு ஆர்வம் காட்டாது என்று கூறும் யுயசழடெ,

ஆனால், அமெரிக்கர்களை கனடா எப்படி நடத்தவேண்டும் என அமெரிக்கா விரும்புமோ, அதேபோலத்தானே கனடாவும் தன் மக்கள் அமெரிக்காவில் நடத்தப்படவேண்டும் என விரும்பும் என்கிறார்.

கனடா மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021: ஈழத்தமிழராக நமது அடையாளத்தை அங்கீகரிப்பது முக்கியம்

கனடாவில் அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு மே 2021 இல் நடைபெறும். உங்கள் சமூகம், மாநிலம், ஆட்சிப்பகுதி மற்றும் நாடு முழுவதையும் பற்றிய முடிவுகளை எடுக்க மக்கள் தொகை கணக்கெடுப்பில் இருந்து கிடைக்கப்படும் தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கனடாவின் மக்கள் தொகை மற்றும், நாம் வாழும் இடங்கள் குறித்த முழுமையான தகவல்களை அறிய ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்கப்படுகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு கனடியர்களின் மக்கள்தொகை, சமூக மற்றும் பொருளாதார நிலைமை, அவர்கள் வாழும் குடியிருப்புகள் பற்றிய தகவல்களை சேகரிக்கிறது.

இந்த தகவல்கள் கனடியர்களுக்கு உயர்தர புள்ளிவிபரத் தகவல்களை வழங்குகிறது. எனவே, அனைத்து கனடியர்களும் 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாப்பட்டியலைப் பூர்த்தி செய்வது முக்கியம். மேலும் சில தகவல்கள் அல்லது 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாப்பட்டியலைப் பூர்த்தி செய்வதற்கு census.gc.ca என்ற இணையதளத்தைப் பார்வையிடவும். இது பாதுகாப்பானது, விரைவானது மற்றும் எளிதானது.

கனடியர்கள், நாட்டின் மாறிவரும் சமூகத்தை துல்லியமாக பார்க்க 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பில் கிடைக்கப்பெறும் தகவல்கள் பயன்படும்.

இது முக்கியமானது, ஏனெனில் சமூகங்கள், மாநிலம், ஆட்சிப்பகுதி மற்றும் முழு நாட்டையும் பாதிக்கும் முக்கியமான முடிவுகளை எடுக்க அரசாங்கங்கள், வணிகங்கள், சங்கங்கள் மற்றும் சமூக அமைப்புகள் மக்கள் தொகை கணக்கெடுப்பைப் பயன்படுத்துகின்றன.

மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாப்பட்டியலைப் பூர்த்தி செய்வதன் மூலம், வேலைவாய்ப்பு, பாடசாலைகள், பொது போக்குவரத்து மற்றும் மருத்துவமனைகளை நிர்ணயிக்கும் சேவைகளைத் திட்டமிடுவதற்குத், தேவையான தகவல்கள் இருப்பதை கனடியர்கள் உறுதி செய்கின்றனர்.

தமிழீழத்திலிருந்து ஈழத்தமிழராக நமது அடையாளத்தை அங்கீகரித்து பாதுகாப்பது மிக முக்கியம். இந்த அடையாளத்தை பாதுகாக்க பலர் தங்கள் உயிரை தியாகம் செய்திருக்கின்றனர்.

இது ஒரு தனித்த தேசமாக சுயநிர்ணய உரிமைக்கான நமது உரிமைகளை பயன்படுத்தவும், ஆக்கிரமித்துள்ள இலங்கை படைகளிலிருந்து தமிழீழத்தை விடுவிக்கவும் பெரிதும் உதவும்.

இலங்கைத் தமிழர் அல்லது சிலோன் தமிழர் என்பது இலங்கையின் ஆக்கரமிப்பாளர்கள் மற்றும் இனப்படுகொலை இலங்கை அரசால் நம்மீது சுமத்தப்பட்ட அடையாளமாகும். நம்மீது சுமத்தப்படும் எதையும் நாம் நிராகரித்து, ஈழத்தின் பூர்வகுடிமக்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

"ஈழத்தமிழ்" (Eelam Tamil) என்பது "ஸ்டாடிஸ்டிக்ஸ் கனடாவின்" (Statistics Canada) சரியான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதில்! இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில், நான் ஒரு ஈழத்தமிழன் என்று அடையாளம் காட்டுகிறேன்.

2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாப்பட்டியலை எவ்வாறு பூர்த்தி செய்வது?

மே மாதத்தில், 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாப்பட்டியலை பூர்த்தி செய்ய உங்கள் வீட்டுக்கு ஒரு கடிதம் வரும். அந்த கடிதத்தில், ஆன்லைனில் வினாப்பட்டியலை முடிக்க உங்களை அனுமதிக்கும் பாதுகாப்பான அணுகல் குறியீட்டைக் காண்பீர்கள்.

ஆன்லைனில் வந்ததும், வினாப்பட்டியலை மூன்று எளிய வழி முறைகளில் முடிக்கலாம். உங்கள் பாதுகாப்பான அணுகல் குறியீட்டைப் பயன்படுத்தி உள்நுழைந்து, வினாப்பட்டியலை பூர்த்தி செய்து படிவத்தை சமர்பிக்கவும். உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் அல்லது காகித பதிப்பு தேவைப்பட்டால், தயவுசெய்து மக்கள் தொகை கணக்கெடுப்பு உதவி எண்ணை அழைக்கவும்.

மேலும் சில தகவல்கள் அல்லது 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாப்பட்டியலை பூர்த்தி செய்ய census.gc.ca என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

மூடினாலும் குற்றம் மூடாவிட்டாலும் குற்றம்

இவ்வாறான நிலையிலேயே "புர்கா ஆடை"யைத் தடை செய்யும் அமைச்சரவை பத்திரத்தில் தான் கையெழுத்திட்ட தாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். இந்த ஆடை, நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு நேரடியாகவே அச்சுறுத்தலாக அமைகிறது. எனது சிறு வயதில் நான் பழகிய முஸ்லிம் நண்பர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், புர்கா என்ற ஆடையை அணியவில்லை. இந்த புர்கா சமீப காலத்தில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு ஆடை. இந்த புர்கா மதவாதத்தை ஏற்படுத்தும் வகையிலான ஆடையாகவே காணப்படுகின்றது. இதனைக் கட்டாயம் தடை செய்ய வேண்டும் அதற்காகவே அமைச்சரவை பத்திரத்தில் நான் கையெழுத்திட்டேன் எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

புர்கா தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல் மற்றும் கடந்த 10 - 15 வருடங்களுக்குள் ஏற்பட்டுள்ள கலாசார மாற்றங்கள் தொடர்பில் இவ்விடயத்தில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் அண்மைக்காலமாக புர்கா உள்ளிட்ட பல வியடங்களில் கலாசார மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சர்வதேச ரீதியில் பல நாடுகள் இவற்றை தடை செய்துள்ளன. பாதுகாப்பிற்கான அச்சுறுத்தலாகக் கருதியே உலக நாடுகள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளன. எனவே இலங்கை தேசிய பாதுகாப்பை மாத்திரம் கருத்திற் கொண்டு தான் இது தொடர்பில் ஆராய்ந்தது என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். இவ்வாறான நிலையிலேயே புர்கா உள்ளிட்ட முகத்தை முழுமையாக மூடும் ஆடைகளை தடை செய்யும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.புர்கா உள்ளிட்ட பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் முகத்தை மறைக்கக்கூடிய அனைத்து ஆடைகளுக்கும் இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 10ஆவது மற்றும் 14ஆவது சரத்தின் பிரகாரம் சமய சுதந்திரம் பாதுகாக்கப்படுகின்றது. இந்த சரத்துக்களின் பிரகாரம், சகல சமயங்களுக்குமான பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் கடமை என்பதுடன் நபரொருவரின் விருப்பத்தின் பிரகாரம் சமயத்தை தெரிவு செய்து கொள்வதற்கான உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் சமயம் தொடர்பான ஒன்று கூடல், வழிபாடு மற்றும் சமய போதனை என்பனவற்றுக்கான உரிமை ஆகியவற்றினை வழங்கியுள்ளது.அதனை நிராகரித்தே தற்போது இந்த "புர்கா ஆடை"யைத் தடை செய்யும் அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்த "புர்கா ஆடை" மீதான தடைக்கு அமைச்சரவை வழங்கியுள்ள அனுமதி ,கோத்தபாய ராஜபக்ச அரசின் "ஒரு நாடு ஒரு சட்டம்" என்ற கொள்கைக்கு முரணாக "ஒரு நாடு இரு சட்டம்" என்பதற்கு வழி ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் கோத்தபாய ராஜபக்ச அரசின் ஒன்றுக்கொன்று முரண்பட்ட சட்டங்களையும் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் வெளிப்படுத்தியும் உள்ளது. இதற்கு கொரோனா தடுப்பு சுகாதார விதிமுறை சட்டமே சிறந்த உதாரணம்

கொரோனா தடுப்பு சுகாதார விதிமுறை சட்டத்தின்படி ஒருவர் முகக் கவசம் அணியாது விட்டால் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் அல்லது 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும். சில வேலைகளில் இரண்டுமே ஒன்றாக இடம்பெறும். அதேவேளை தற்போது அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள இந்த "புர்கா ஆடை" மீதான தடைக்கான அனுமதியின் மூலம் முகத்தை மூடுவது தண்டனைக்குரிய குற்றம். ஒரு சட்டம் முகத்தை மூடாவிட்டால் தண்டனை. இன்னொரு சட்டம் முகத்தை மூடினால் தண்டனை. அதாவது முகத்தை மூடாவிட்டாலும் தண்டனை முகத்தை மூடினாலும் தண்டனை என்றால் பாவம் முஸ்லிம் பெண்கள் என்னதான் செய்வார்கள்?

இதேவேளை இலங்கை முஸ்லிம் பெண்களால் அதிகம் பயன்படுத்தப்படாத இந்த "புர்கா ஆடை" தொடர்பில் ஏனைய இன மக்களுக்கு பெரிதாக விளக்கமில்லை. இதுவும் எதிர்காலத்தில் முஸ்லிம் பெண்களுக்கு பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தவுள்ளது. உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையடுத்து வைத்தியசாலைகளில், பாடசாலைகளில், வர்த்தக நிறுவனங்களில், பொது போக்குவரத்து சேவைகளில் புர்காவுக்கு மாத்திரமல்லாது தெளிவான விளக்கமின்மையால் ஹிஜாப் மற்றும் அபாயாவுக்கும் அப்போது தடை விதிக்கப்பட்டது. இதனால் முஸ்லிம் பெண்கள் வெளியிடங்களில் பல இன்னல்களுக்குள்ளாகினர் அவர்களுக்கு வைத்திய சேவைகள் கூட மறுக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் புர்கா என்றால் என்ன?, நிகாப் என்றால் என்ன?, ஹிஜாப் என்றால் என்ன? என்பது பற்றி ஏனைய இன மக்கள் குறிப்பாக சிங்கள மக்கள் தெளிவில்லாமல் உள்ள நிலையில் "புர்கா ஆடை" மீதான தடை முஸ்லிம் பெண்களின் ஏனைய ஆடைகளுக்கும் எதிர்காலத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தப்போகின்றது.

"புர்கா ஆடை" மீதான தடை 21-04-2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினாலேயே முதலில் கொண்டுவரப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது. இதன் மூல முஸ்லிம் பெண்களுக்கு எதிராக 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அநீதிக்கும் பாவத்துக்கும் தண்டனையாகவோ என்னவோதான் 20-03-2020 இலிருந்து விரும்பியோ விரும்பாமலோ கொரோனா என்ற வைரஸ் காரணமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற இன, மத, மொழி, ஆண், பெண் வேறுபாடின்றி இன்று வரை அனைவரும் முகத்தை மூடிக்கொண்டு முகக்கவசம் அணிந்து கொண்டு அலையவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கோவிட் -19
POP-UP சோதனை
புதிய நேர அட்டவணை

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஏப்ரல் 10, 2021 முதல் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் திறக்கப்படும். 9:30 a.m. - 2:30 p.m.

YMCA
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
ஏப்ரல் 5, 2021 முதல் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் திறக்கப்படும். 9:30 a.m. - 2:30 p.m.

Markham Chinese Presbyterian Church
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
ஏப்ரல் 6, 2021 முதல் திறக்கப்படும். 9:30 a.m. - 2:30 p.m.

Islamic Society of Markham (நியமனம் மூலம் மட்டுமே)
2900 Denison Street, Markham, ON L3S 4J8 (Denison & Middlefield)
ஏப்ரல் 8, 2021 முதல் திறக்கப்படும். 9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
www.carefirstontario.ca
Walk-In ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் www.carefirstontario.ca அல்லது அழைக்கவும் 416-646-5108

உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association

Carefirst Family Health Team
Health for All Family Health Team
Islamic Society of Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on April 5, 2021

தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.
Carefirst இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:
416 646 5108 (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் 9. 00 மணியிலிருந்து பிற்பகல் 5. 00 மணிவரை)

தடுப்பூசிகள் எம்மை தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்க உதவுகிறது.

யோர்க் நகரத்தில் உங்கள் கோவிட் 19 தடுப்பூசிகளுக்கான முன்பதிவினை மேற்கொள்ள http://york.ca/covid19vaccineஎன்ற இணையத்தை அணுகுங்கள்.

உங்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான முன்பதிவினை மேற்கொள்ள உதவி தேவைப்பட்டால் கீழே தரப்பட்டுள்ள கிளினிக்குகளின் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தகவல்களைப் பெற்று கொள்ளலாம்.

- Aaniin Community Centre
  1-877-464-9675
- Cornell Community Centre
  1-833-943-3900

நீங்கள் கோவிட் 19 தடுப்பூசிக்கு தகுதியுடையவரா என அறிய அழையுங்கள் 1-877-463-9675. உங்களுக்கு தடுப்பூசி ஏற்புடையதா என அறிந்து கொள்ள உங்கள் குடும்ப மருத்துவரை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளுங்கள்.

ஏனைய வளங்கள்:

ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள் காணப்பட்டால் அழைக்க வேண்டியது:
Tel: 1-866-797-0000

ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:
211ontario.ca

யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்
York Region COVID-19 Voluntary Isolation Centre
1-877-464-9675
york.ca/isolationcentre

யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு
1-800-361-5653

Carefirst முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது:

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'e Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services

உலக செய்திகள்

பிரேசிலில் மழலையர் பள்ளிக்குள் புகுந்து கத்தியால் தாக்கிய சிறுவன்; 5 பேர் உயிரிழப்பு

பிரேசிலின் தெற்குப் பகுதியில் உள்ள சாண்டா கேடரினா மாகாணத்தின் சவுடேட்ஸ் நகரில் உள்ள மழலையர் பள்ளி ஒன்று உள்ளது. இங்கு நேற்று காலை வழக்கம் போல் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது 18 வயதான சிறுவன் ஒருவன் கையில் பட்டா கத்தியுடன் மழலையர் பள்ளிக்குள் நுழைந்தான். அவன் பள்ளியின் நுழைவுவாயிலில் நின்று கொண்டிருந்த ஆசிரியை ஒருவரை கத்தியால் சரமாரியாக வெட்டினான். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்து துடிதுடித்து இறந்தார்.

ஆசிரியையின் அலறல் சத்தம் கேட்டு சக ஆசிரியைகள் மற்றும் ஆசிரியர்கள் வெளியே வந்து பார்த்தனர். அப்போது சிறுவன் ரத்தம் படிந்த பட்டா கத்தியுடன் நிற்பதை கண்டு அவர்கள் திகைத்துப் போயினர். பின்னர் அவர்கள் வகுப்பறைகளில் உள்ள குழந்தைகளை காப்பாற்றுவதற்காக வகுப்பறைகளுக்குள் ஓடிச் சென்று கதவுகளை பூட்டி கொண்டனர்.

ஆனாலும் அந்த சிறுவன் ஒரு வகுப்பறையின் கதவை உடைத்து உள்ளே நுழைந்தான்.பின்னர் அங்கிருந்த குழந்தைகளையும் ஆசிரியை ஒருவரையும் பட்டா கத்தியால் சரமாரியாக வெட்டினான். இதில் 2 வயதுக்குட்பட்ட 3 குழந்தைகளும் ஒரு ஆசிரியையும் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் சரிந்து துடிதுடித்து பரிதாபமாக இறந்தனர். மேலும் ஒரு குழந்தை பலத்த காயமடைந்தது.

இதற்கிடையில் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் மழலையர் பள்ளியில் பட்டாக்கத்தி தாக்குதல் நடப்பதாக போலீசுக்கு தகவல் கொடுத்தனர்.

அதன்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற போலீசார் மலழையர் பள்ளியை சுற்றி வளைத்து தங்கள் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்தனர்.

பின்னர் அவர்கள் இந்த கொடூர தாக்குதலை நிகழ்த்திய சிறுவனை கைது செய்ய முற்பட்டனர். ஆனால் சிறுவன் போலீசுக்கு பயந்து பட்டா கத்தியால் தன்னைத் தானே வெட்டிக் கொண்டான். இதில் படுகாயம் அடைந்த அந்த சிறுவன் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றான்.

அதேபோல் இந்த பட்டாக்கத்தி தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு குழந்தையும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறது.

இந்த தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவராத நிலையில் போலீசார் இதுபற்றி தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேசமயம் தாக்குதல் நடத்திய சிறுவனின் பெயர் உள்ளிட்ட விவரங்களை போலீசார் வெளியிடவில்லை.

இதனிடையே மழலையர் பள்ளியில் நடந்த இந்த கோர சம்பவத்துக்காக சாண்டா கேடரினா மாகாணத்தில் 3 நாட்களுக்கு துக்கம் அனுசரிக்கப்படும் என மாகாண அரசு அறிவித்துள்ளது.

கடந்த 2019-ம் ஆண்டு மார்ச் மாதம் ரியோ டி ஜெனிரோ நகரில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் மர்மநபர்கள் 2 பேர் புகுந்து நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 5 மாணவர்கள், ஒரு ஆசிரியை மற்றும் பள்ளி நிர்வாக ஊழியர் ஒருவர் என 7 பேர் கொல்லப்பட்டது நினைவுகூரத்தக்கது.

கட்டுப்பாட்டை இழந்தது சீன ரொக்கெட்

விண்ணில் கட்டுப்பாட்டை இழந்த சீன ரொக்கெட் எப்போது வேண்டுமானாலும் பூமியில் விழலாம் எனக் கூறப்படுகின்றது.

அமெரிக்காவைப் போல் தங்களுக்கென்று சொந்தமான விண்வெளி நிலையத்தை அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக, கடந்த மாத இறுதியில், டுழபெ ஆயசஉா 5டீ என்றழைக்கப்படும் 100 அடி உயர ராட்சத ராக்கெட்டை விண்ணில் செலுத்தியது.

தொழில்நுட்பக் கோளாறால் கட்டுப்பாட்டை இழந்த ராக்கெட், மணிக்கு 27,600 கிலோமீட்டர் வேகத்தில், 90 நிமிடங்களுக்கு ஒரு முறை பூமியை சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

21 டொன் எடையிலான இந்த ரொக்கெட், வரும் ஒன்பதாம் திகதி பல பாகங்களாக உடைந்து மக்கள் வசிக்கும் பகுதிகளில் விழ வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

புதிதாக தகவல் தொடர்பு வலைத்தளத்தை தொடங்கிய டிரம்ப்

டிரம்ப் மிகவிரைவில் தனக்கென சொந்தமாக ஒரு தளத்தை அமைத்து சமூக ஊடகத்துக்கு திரும்புவார் என அவரது ஆலோசகர் ஜாசேன் மில்லர் கடந்த சில வாரங்களுக்கு முன்பு தெரிவித்தார்.

அமெரிக்காவில் கடந்த ஜனவரி மாதம் 6-ந் தேதி, முன்னாள் ஜனாதிபதி டிரம்பின் ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கானோர் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து கலவரத்தில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நாடாளுமன்ற வன்முறை தொடங்குவதற்கு முன்பும் வன்முறை நடந்து கொண்டிருந்தபோதும் டிரம்ப் சமூக வலைதளங்களில் தேர்தல் முறைகேடு தொடர்பாக பல்வேறு பதிவுகளை வெளியிட்டார்.

இதனால் டிரம்ப் வன்முறையை தூண்டியதாகக் கூறி டுவிட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூப் ஆகிய சமூக வலைத்தள நிறுவனங்கள் அனைத்தும் டிரம்பின் கணக்கை நிரந்தரமாக முடக்கின.

இந்த சூழலில் டிரம்ப் மிகவிரைவில் தனக்கென சொந்தமாக ஒரு தளத்தை அமைத்து சமூக ஊடகத்துக்கு திரும்புவார் என அவரது ஆலோசகர் ஜாசேன் மில்லர் கடந்த சில வாரங்களுக்கு முன்பு தெரிவித்தார்.அதன்படி டிரம்ப் தற்போது புதிதாக தகவல் தொடர்பு வலைதளம் ஒன்றை தொடங்கியுள்ளார்.

இந்த வலைத்தளத்தில் உலகம் முழுவதிலிருந்தும் மக்கள் டிரம்பின் பதிவுகளுக்கு “லைக்” செய்வது மற்றும் கருத்து தெரிவிப்பதோடு அவற்றை டுவிட்டர் பேஸ்புக் உள்ளிட்டவற்றிலும் பகிர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் டிரம்பின் ஆலோசகர் ஜாசேன் மில்லர் முன்னர் கூறியதுபோல இது ஒரு சமூக வலைத்தளம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மியன்மாரில் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேவைகளுக்குத் தடை

மியன்மாரில் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேவைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் தொலைக்காட்சி இனி சட்டப்பூர்வமானது அல்ல எனவும் அவ்வாறு சட்டத்தை மீறுபவர்கள் அல்லது செயற்கைக் கோள் ஊடானன தகவல்களைப் பயன்படுத்துவோர் கைதுசெய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் குற்றத்துக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் 320 டொலர் அபராதமும் விதிக்கப்படும் என மாநில தொலைக்காட்சியான எம்.ஆர். டிவி தெரிவித்துள்ளது.

குறித்த ஊடகங்கள், தேசிய பாதுகாப்பையும், சட்டத்தின் ஆட்சியையும், பொது ஒழுங்கையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் செய்திகளை ஒளிபரப்பி தேசத்துரோகம் செய்பவர்களை ஊக்குவிப்பதாக அந்நாட்டு இராணுவத் தலைமை குறிப்பிட்டுள்ளது.

மியன்மாரில், கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனை எதிர்த்து மக்கள் பெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், பாதுகாப்புப் படையினர் போராட்டங்களைத் தடுப்பதற்கான துப்பாக்கிச் சூடுகளை மேற்கொண்டுள்ளதோடு ஊடகங்கள் மீதும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதனிடையே, மக்களி மீதான பாதுகாப்புத் தரப்பினரலின் தாக்குதலில் இதுவரை 760 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், செய்திகளை வெளிக்கொண்டுவந்த குறைத்தது 50 சுயாதீன ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அள்ளி கொடுத்த உலக தமிழர்கள் கனடாவின் ரொறன்ரோவில் தமிழ் இருக்கை உறுதி

கனடாவின் ரொறன்ரோவில் தமிழ் இருக்கை அமையவுள்ளது.

கனடாவின் ரொறன்ரோவின் பல்கலைக்கழகத்திலும் தமிழ் இருக்கையை அமைப்பதற்கான முயற்சிகளை தமிழ் இருக்கை அறக்கட்டளை அமைப்பும், கனடியத் தமிழர் பேரவையும் இணைந்து மேற்கொண்டன.

புகழ்பெற்ற ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதற்கு ரூ.17.1 கோடி நிதி தேவைப்பட்டதால், அதனை திறட்டும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து வந்தன.

இதற்கும் உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்கள் நிதியுதவி அளித்தனர். தமிழ் இருக்கைக்காக தமிழக அரசு ரூ.1 கோடியும், திமுக சார்பில் ரூ.10 லட்சமும் நிதியுதவி அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், ரொறன்ரோவில் தமிழ் இருக்கை அமையவிருப்பது தொடர்பாக கனடா நாட்டின் நாடாளுமன்றத்தில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களைக் கற்றுத்தருவதோடு பல்வேறு முக்கியமான ஆய்வுகளை முன்னெடுக்கும் மையப்புள்ளியாகவும் அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்பு கொரோனா மையமாக இருந்த கனேடிய நகரம் பயங்கரமான மூன்றாவது அலையை தவிர்த்தது எப்படி?

முன்பு கனடாவின் கொரோனா மையமாக இருந்த மொன்றியல் நகரம் பயங்கரமான கொரோனாவின் மூன்றாவது அலையை வெற்றிகரமாக தவிர்த்துள்ளது.

எப்படி? வழக்கமாக என்னவெல்லாம் செய்வோமோ, அனைத்தையும் மாற்றினோம் என்கிறார் மொன்றியல் பொது சுகாதார துறையைச் சேர்ந்த Dr. Sarah-Amélie Mercure.

முதல் திடீர் மாற்றம் பெற்ற கொரோனா வைரஸ் கியூபெக்கில் கண்டறியப்பட்டதுமே, அது வேகமாகப் பரவக்கூடியது என்பது தெரியவந்ததும் நடவடிக்கையைத் துவக்கியது Dr. Sarahவின் குழு.

முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தினார் Dr. Sarah, தொற்றுடையவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களை விரைந்து கண்டறிதல், விரைவான ஆய்வக முடிவுகள் மூலம் திடீர் மாற்றம் பெற்ற வைரஸ்களை கண்டறிதல், ஒரு திடீர் மாற்றம் பெற்ற வைரஸ் கண்டறியப்பட்டதும் பள்ளிகளையும் அலுவலகங்களையும் உடனடியாக மூடுதல், பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்பூசி போடும் திட்டத்தை செயல்படுத்துதல்... என அத்தனை விடயங்களையும் சரியான நேரத்தில் செயல்படுத்தினார் Dr. Sarah.

எல்லாவற்றையும் விட முக்கிய விடயம், மக்கள் அத்தனை விடயத்திற்கும் ஒத்துழைப்பு கொடுத்ததுதான்.

Liberty@Kennedy Tax & Accounting
Professional Accurate Guaranteed
At your service since 1991
பெருந்தொற்று காலப்பகுதியில் வீட்டில் இருந்து வேலை செய்கிறீர்களா?
DID YOU WORK FROM HOME DUE TO COVID-19?
You are eligible to claim home expenses.
You could get a larger REFUND for the 2021 Tax Year.
BOOK AN APPOINTMENT 416-750-0039
416-750-0039
647-784-1829
vgalibtax@yahoo.ca
102-1911 KENNEDY RD
SCARBOROUGH, ON
M1P 2L9

• Personal Loan
• Car Loan
• Line of Credit (upto 75K)
• Mortgage
• Credit Card
• RESP
• Consoliation Loan
• RRSP
மற்றும் கடன் சம்பந்தமான தேவைகளுக்கு அழையுங்கள்
Ravi - 647-859-2100

It's important to protect yourself and your family from the financial impact of lost income due to accident, illness or disability.
Do you have a plan in place?
Life insurance • Mortgage protection insurance • RESPs* • RRSPs • Critical illness insurance

Kosalai Kumaraguruthasan*
647-981-1041
kosalai.kumaraguruthasan@sunlife.com
www.sunlife.ca/kosalai.kumaraguruthasan
Sun Life
Life's brighter under the sun
*Mutual funds distributed by Sun Life Financial Investment Services (Canada) Inc.
Sun Life Assurance Company of Canada is a member of the Sun Life group of companies.
© Sun Life Assurance Company of Canada, 2021.

MORTGAGES & LOANS

Home / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

SUBRA MORTGAGES INC.

MORTGAGE IN ANY SITUATIONS

Office: 1585 Markham Rd, Unit # 406, Toronto, M1B 2W1, Canada.

www.subra.com

T.NESAN
Subra
416-908-5656

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance, Renewal & Switches
- Multi Rental Properties
- Home, Business Equity Line of Credit
- Home, Business Equity Loans
- Purchases (Builders, MLS & Private)

Loan Amount	Biweekly Payment	Term
$ 755,460.00	$1177.78	5 years variable closed
$755,460.00	$1200.90	5 years fixed

Office: 416-660-5656 | Fax: 647-351-3099 | Toll Free: 1-844-878-2721
Email: mortgage@subra.com

JOB! JOB!! JOB!!!

12 hrs shift (keel and 407 area)
7-7 am / 7-7 pm
Three shift's are available

We Need People Immediately

7-3 am / 3-11 evening / 11-7 midnight
and many more

Call: 4167373905 or 416.642.0208
Email us: mtheesan@ yahoo.com

STUDY REAL ESTATE

Real Estate EXAM PREP.
Pass Each Exam in 3-4 Weeks

STUDY 4 REAL ESTATE
218 - 4455
Sheppard Avenue East,
Toronto, Ontario
M1J 3P1
Tel: 647-723-1187
E-mail: study4realestate@gmail.com

உங்கள் வீட்டை நல்ல விலைக்கு விற்க வேண்டுமா?
அல்லது அழகிய புதிய வீடு ஒன்றை வாங்க வேண்டுமா?

அர்ப்பணிப்புடன் தொடர்ந்து உங்கள் சேவையில்

உங்களின் றியல் எஸ்டேட் தேவைகள்
குறித்து ஆலோசிக்க
இன்றே அழையுங்கள்

ROYAL LEPAGE Signature Realty

SATHEESAN KUMARASAMY
SALES REPRESENTATIVE
Direct 647.723.0087
Office 905.568.2121
satheesan@royallepage.ca
www.royallepage.ca

R R.Rajkumar B.Com (Hons) M.B.A

J.R.B GROUP CORPORATION

Welfare, ODSP, Medical visit translation services

அனைவரும் வீடு வாங்க சிறப்பான சேவை...

* Loans
* Mortgages
* Insurance
* Visa
* Real Estate
* Credit Counseling
* Master Card

Best Rate Mortgage Arranged

Almost All Services Available

BUSINESS LOAN 25 K to 500,000 New Business
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகருக்கான சிறப்பான சேவை

647-289-6164 / 416-655-5577

வீடு – வாங்க, விற்க...

Selva Selvadurai
Broker
Dir: 416.56.7327
Off: 416.284.5555
Fax: 416.284.5727
selva4homes@gmail.com

HomeLife Galaxy REAL ESTATE LTD.
210- Corporate Dr., Toronto ON. M1H 3G5
Brokerage Independently owned and operate

Ranjan Francis Xavier
Sales Reprensentative
Dir: 416.816.1220
Off: 416.284.5555
Fax: 416.284.5727
francisranjan@hotmail.com

111 Grangeway Avenue, Suite 301 Toronto, ON., M1H 3E9

நம்பி வாங்க தம்பி பிரபாவிடம்
திரும்பி சந்தோசமா போங்க...

தம்பி பிரபா (416) 645 3027

வங்கிகளில் MORTGAGE பெற்றுக்கொள்ள அழையுங்கள்
அதிகுறைந்த வட்டி வீதத்தில் ஆரம்பித்து
over $1 Million
வரை பெற்றுக்கொள்ளலாம்
MATRIX MORTGAGE GOLOBAL LIC# 11108

TD Canada Trust | NATIONAL BANK | Manulife Bank | ICICI Bank | Scotiabank | B2B BANK | HomeEquity Bank | EQ EQUITABLE BANK

ஈழமுரசு

தமிழ் பேசும் வாசகர்களை புதிய தளத்தை நோக்கி...

விளம்பரத் தொடர்புகளுக்கு: 647-808-7766 | Email: eelamurasu@yahoo.com